Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 24 ரூபா 30.00

දිනමුරසු වාරමලර්

ஏப்ரல் 12, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு

புத்தாண்டு சிறப்பிதழ்

## இலங்கையின் எதிர்காலமும் சர்வதேச எதிர்பார்ப்பும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய உ




# A-Z

பிரித்தானியாவில் எந்தவொரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ஆங்கில அகர வரிசையைப் பயன்படுத்துவது பிரபல்யமாகக் காணப்படுகின்றது.

அதே போல இந்த வருடத்தில் தபால் சேவைக்காக தனது புதிய முத்திரைகளை வெளியிடும் போதும் இதே நடைமுறையைப் பின்பற்றி அசத்தியுள்ளது பிரிட்டன். எனினும் சிநேகமான சந்தர்ப்பங்களில் இந்த அகரவரிசையைப் பயன்படுத்தும் போது சிக்கலில் மாட்டும் இம்முறையும் பெயர் சூட்டுவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் பிரித்தானியாவின் பிரபல்யமான நகரங்களை மையமாகக் கொண்டு முதல்தர முத்திரைகளை வெளியிட்டுள்ளது.



## புதிய குடைகள்

மழையிலிருந்து தப்பிக்க குடை பிடிப்பது தான் வழமை. ஆனால் பிரித்தானியர்களுக்கு கையால் குடை பிடிப்பது கஷ்டமாக இருந்திருக்கிறது.

அதைப் போக்க அவர்கள் கை பிடிக்கத் தேவையில்லாத குடையை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இனி மழை, வெயிலில் இருந்து பாதுகாக்க தோளில் பொருத்தப்பட்ட வித்தியாசமான ஒரு குடையை அணிந்திருக்கிறார்கள் இவர்கள். இந்தக் குடையின் விலை +40 பவுண்கள் மட்டுமே. 50mph வேகத்தில் வீசுகின்ற காற்றையும் எதிர்க்கிறதாம் இந்தக் குடை. இதிலுள்ள விசேடம் என்னவென்றால் மழையில் அல்லது வெயிலில் சைக்கிளில் செல்லும் போது இலகுவாகப் பிடிக்கலாம் என்பது தான்.





## சிக்னல் வீடு

பெரும்பாலான பறவைகள் மரங்கள், கிளைகள் போன்றவற்றில் தான் கூடு கட்டும். ஆனால் நகரத்தில் வாழ்கின்ற இந்தப் பறவைக் குடும்பம் ஒன்று போக்குவரத்து சிக்னலில் கூடு கட்டி தஞ்சம் பொறித்து இருக்கின்றது. போக்குவரத்து சிக்னலைக் கடந்து போகும் போது பறவைகள் பறந்து செல்வதை முதலில் பார்த்ததாக [illegible] என்பவர் கூறியுள்ளார். அதன் பின்னர் தான் சிக்னலில் கூடு கட்டியிருந்த விடயம் தெரிய வந்ததாகக் கூறுகின்றார் அவர். சிக்னல் விளக்கின் வெளிச்சத்தில் குஞ்சுகள் சூடாக இருக்கின்றனவாம். எது எவ்வாறிருப்பினும் மனிதன் மரங்களை அழிப்பதால் சிக்னல் விளக்குகளைத் தேடி வரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்ட பரிதாபப் பறவைக் குடும்பம் தான் இது.

## அடுப்புகள்

USB இணைப்புடன் பயன்படுத்தக் கூடியதும், எளிதில் எடுத்துச் செல்லக் கூடியதுமான Power Pot எனப்படும் மின்சார அடுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.


இதுவே USB இணைப்புடன் கொண்ட முதலாவது வெப்ப இலத்திரனியல் மின்சார அடுப்பாகும். இவற்றை மின்சார வசதியற்ற இடங்களில் சார்ஜ் செய்து பயன்படுத்த முடியும். இவை 5W, 10 W, 15 W ஆகிய வேறுபட்ட வலு வகையுடைய மின்சாரத்தில் பயன்படுத்த கூடியவாறு வெவ்வேறு அளவுகளில் கிடைக்கின்றன. இதன் பெறுமதியானது பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவிற்கு அமைய 125 தொடக்கம் 500 அமெரிக்க டொலர்களுக்குள் மாறுபடக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.




## நகரும் வீடுகள்

மனிதர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு உருவாக்கப்பட்ட வீடுகளுக்கு கால் முளைத்தால் எப்படி இருக்கும்? தினமும் பிடித்தமான இடங்களில் தங்கலாம் அல்லவா?. அதே போன்று இடத்திற்கு இடம் நகரும் வீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் அதிகம் காணப்படும் இந்த வீடுகள் சுற்றுலாப் பயணிகளுக்காக வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன.

படத்தில் நீங்கள் காண்பது சகல வசதிகளையும் உள்ளடக்கிய 130 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளில் ஒன்றாகும்.







### வெப்பம் தணிக்கும் நீர் யானைகள்


இந்தியாவின் வடமாநிலங்களில் வெயில் அதிகமாக உள்ளது. இதனால் டெல்லி மிருகக்காட்சி சாலையில் பராமரிக்கப்பட்டு வரும் நீர் யானைகள், அங்குள்ள குளத்தில் ஆனந்தமாக குளித்து தனது வெப்பத்தினைத் தணித்துக் கொள்கின்றன.

அவ்வாறு குளத்தில் குளித்துக் கொண்டு வெப்பத்தினைத் தணித்துக் கொண்டும் உற்சாகத்துடன் கூச்சலிடுவதைப் படத்தில் காணலாம்.

## மரத்தில் உல்லாசம்

மனிதன் தான் பாதுகாப்பாக வசிப்பதற்காக உருவாக்கிய வீடுகள் மண்வீட்டிலிருந்து கல் வீடு வரையான வளர்ச்சியினைப் பெற்று காணப்படுகின்றன.

எனினும் அத்துடன் நின்றுவிடாது மனிதன் இன்று புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வித்தியாசமான வடிவங்களில் அவற்றை உருவாக்க ஆரம்பித்துள்ளான். இங்கிலாந்தில் [illegible]



## டாடி - மம்மி தேவையில்லை தடைபோட யாருமில்லை

உண்மையில் இந்தக் குழந்தையின் செயலைப் பார்த்து அதன் பெற்றோர் மட்டுமல்ல எல்லோரும் அதிசயப்பட்டுள்ளனர். தான் Toilet போகப் போகும் செய்தியை [illegible] மூலம் தனது தாயாருக்குத் தெரிவிக்கின்றது [illegible] குழந்தை.

வழமையாக 32 மாதங்களின் பின் குழந்தைகள் கூட கட்டியிருக்கின்ற துணியோடு Toilet போகின்றன. ஆனால் Izabella என்ற இந்தச் சுட்டிக் குழந்தை மலம் கழிக்க முதல் தனது தாயாருக்கு 'boo boo' என்று குரல் எழுப்பி தெரிவிக்கின்றது. அந்தச் செய்தியைத் தெரிந்து கொள்ளும் தாயார் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்கின்றார். குறித்த குழந்தைக்குப் பசி வந்தால் 'Eh,Eh', என்ற ஒலியை எழுப்புகின்றதாம்.

அம்மாவை அழைப்பதற்கு 'Ah' என்ற சொல்லையும், அப்பாவை அழைப்பதற்கு 'Ger' என்ற சொல்லையும் உச்சரிக்கிறதாம் அந்தக் குழந்தை.

சொல்லிக் கொள்ளாமல் மலம் கழிக்கின்ற குழந்தைகள் மத்தியில் சொல்லிவிட்டு மலம் கழிக்கின்ற தனது குழந்தையை ஆர்வமாக எடுத்துக் கொஞ்சுகின்றார் அதன் தாயார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமுரசு வாரமலர்
[illegible] இல: 1774, [illegible]
[illegible] இல: 167, [illegible]
தொலைபேசி: 021 222 1811
தொலைநகல் (Fax): 021 222 1811
மின்னஞ்சல் (E-mail): [illegible]

## முரசம்

### நடந்தவை மறப்போம்! நம்பிக்கை வளர்ப்போம்!!

[illegible]

தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டை மகிழ்ச்சியோடு கொண்டாடக் காத்திருக்கும் அனைவருக்கும் தினமுரசு குடும்பத்தினரின் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு அபிப்பிராயங்கள் நிறைந்த செய்திகளை வழங்கி வருகின்றனர். இது நாள் வரை ஜெனிவாவில் இலங்கை அரசுக்கெதிரான தீர்மானங்கள் அதன் பின்னான பரபரப்புகளில் தமிழ் மக்களை இழுத்துச் சென்றவர்கள் இப்போது மேதின கொண்டாட்டங்களில் மக்களை பங்குகொள்ளச் செய்ய முயற்சிக்கின்றனர்.

யாழ் மாவட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியோடு சேர்ந்து தமிழ் மக்களின் எதிர்க்கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பு இணைந்து எதிர்க்கட்சிகளின் மேதினத்தை நடாத்தத் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் தமிழ் மக்களின் ஆதரவுக் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மாபெரும் மேதின எழுச்சியை கொண்டாடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றது.

இவ் வருட மேதினம் யாழ் மண்ணில் வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த நிகழ்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு இடையே வடக்குக்கான மாகாண சபைத் தேர்தல் இவ்வருடத்தின் நடுப் பகுதியில் நடைபெறும் என நம்பகமாக தெரியவருகின்றது.

வடக்கு மாகாண சபைக்குத் தங்களை தயார்படுத்திக் கொள்ளும் முன்மாதிரி செயற்பாடாக மேதினக் கொண்டாட்டங்கள் அரசியல் கட்சிகளால் பார்க்கப்படுகின்றது.

தமிழ் மக்களை பொறுத்தவரை தென்னிலங்கையில் நடைபெறும் ஆட்கடத்தல்கள், கிழக்கு இலங்கையில் நடைபெற்ற சிலையுடைப்புக்கள், வடக்கு இலங்கையில் இன்னும் தொடரும் சமூகச் சீரழிவுகள், கொள்ளையர்களின் கைவரிசை, அச்சுறுத்தும் அழுத்தங்கள், கண்காணிக்கும் கழுகுப் பார்வைகள் என்பவை எல்லாம் இணைந்து விலைகொடுத்து பெறப்பட்டிருக்கும் சமாதானத்தின் மீது சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

வெளிநாட்டு அழுத்தங்களையும், இனவாதம் கக்கும் விஷமிகளின் அரசியலையும் காரணமாக கூறிக்கொண்டு அரசியல் பிரச்சினைகள் மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நிராகரிக்க முடியாது என்பதனை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற கொள்கைக்கு அமைய தீர்வுகளும் பரிகாரங்களும் விரைந்து காணப்பட வேண்டும். 2011ஆம் ஆண்டோடு நடந்து முடிந்தவைகளை படிப்பினைகளாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும் 2012 தமிழ், சிங்கள புத்தாண்டை ஐக்கியத்தோடு இணைந்து வாழும் ஆரம்பத்திற்குரிய ஆண்டாக மாற்றியமைக்க வேண்டும்.

பிற அழுத்தங்கள் இந்த நாட்டில் வாழும் இனங்களிடையே விரிசலையும், நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்துவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

நடந்து முடிந்த கதைகளில் இருந்து கற்றுக்கொண்டவர்களாகவும், புதிய நம்பிக்கைகளோடு வாழ முற்பட்டவர்களாகவும் இப் புத்தாண்டில் உறுதியெடுத்துக் கொள்வோம்.

மீண்டும் அடுத்த வாரம் [illegible]

[illegible]

# இலங்கையின் எதிர்காலமும் சர்வதேச எதிர்பார்ப்பும்

சிவன்

கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கம் இன முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்வதற்காக அமைத்துக் கொண்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும்.

அதற்குத் தேவையான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும், ஒரு வருட காலப்பகுதிக்குள் இவற்றைச் செய்யவேண்டும் என்றும் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா உட்பட 25 நாடுகள் ஆதரித்தது.

அமெரிக்காவின் தீர்மானத்தை இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்று பலரும் கூறினார்கள். இலங்கை அரசாங்கம் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு முயற்சித்து தோற்றுப்போனது. 15 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன. 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்தன.

இதற்குப் பிறகு இலங்கையில் நடந்துவரும் சம்பவங்களும், கொதிப்புகளும் சர்வதேச நாடுகளுக்கு நகைப்புக்குரியதாகவே இருந்து வருகின்றது. உலக நாடுகளைப் பொறுத்தவரை அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் இலங்கைக்கு பெரும்பாதகமானதல்ல. அதேவேளை இலங்கையின் நம்பிக்கைக்குரிய நண்பனான இந்தியா அமெரிக்காவின் தீர்மானத்தில் இலங்கைக்குள் அந்நியத் தலையீட்டுக்கு வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளை நீக்கி அல்லது மாற்றம் செய்து இலங்கையின் இறைமைக்கு பங்கம் ஏற்படாதபடி பாதுகாத்துள்ளது.

அதாவது தீர்மானத்தை எதிர்த்தும் பின்னர் அது வெற்றி பெற்றால் தலையைச் சொறிந்து கொண்டு இருப்பதை விடவும், ஆதரவு தெரிவித்துக் கொண்டு அதற்குள் சென்று விடயத்தைக் கையாள்வது சிறந்த இராஜதந்திரம் என்ற வகையில் இந்தியா செயற்பட்டுள்ளது.

இலங்கையில் இந்த விடயத்தை ஊதிப்பெருப்பித்து வீரர்கள். ஏதோ ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையை அமெரிக்கா கொண்டு வந்து விட்டதைப்போலவும், அல்லது இலங்கைக்கு எதிராக போர் தொடுக்க அமெரிக்கா தீர்மானம் நிறைவேற்றி விட்டதைப் போலவும் அவற்றுக்கு இந்தியா வாயைப் பொத்திக் கொண்டும், கைகளைக்கட்டிக் கொண்டும் நின்று துணை போய்விட்டதாகவும் ஆவேசமாக பலரும் காவடி எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தற்போது மட்டக்களப்பில் மகாத்மா காந்தியின் சிலை உடைப்பும் இந்தியாவுக்கு எதிரான செயற்பாடுகளுக்கும் தொடர்புபடுத்தக் கூடிய வகையில் நிலைமை இந்தியாவுக்கு எதிரான பிரதிபலிப்புக்கள் நாளுக்கு நாள் வளர்ச்சி கண்டு வருகின்றன.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாநகரத்தில் தமிழ் தலைவர்களின் சிலைகளும், மகாத்மா காந்தி போன்ற பெருந்தலைவர்களின் சிலைகளும் மர்ம நபர்களால் உடைக்கப்படுவது எரிச்சலடையச் செய்கின்றது.

இது தமிழ் மக்களை தூண்டிவிட செய்யப்படுகின்றதா? அல்லது தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் மோதவிடுகின்ற நோக்கத்தோடு செய்யப்படுகின்றதா? அல்லது இந்த நாட்டில் அகிம்சைக்கும், வழிகாட்டி வாழ்ந்த தலைமைகளுக்கு இங்கே இடமில்லை என்ற செய்தி உருவாக்கம் பெறுகின்றதா? அல்லது சர்வதேசம் எதைச் சொன்னாலும் அதற்கு எதிர்மறையான விளைவுகளே இருக்கின்றன என்ற செய்தி சொல்லப்படுகின்றதா? என்ற கேள்விகள் எழுகின்றன.

மறுபக்கத்தில் ஆட்கள் கடத்தப்படுவதும், காணாமல் போவதும் யுத்த காலத்தில் நடந்ததைப்போல அண்மைக்காலமாக நடந்தேறுகின்றன. மீண்டும் நிலையற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. யார் எப்போது காணாமல் போவார்கள் என்ற நிலைமை தோன்றியுள்ளது. ஜே.வி.பி. மாற்றுக்குழுத் தலைவர் பிரேம்குமார் குணரட்ணம் மற்றும் அதன் முக்கியஸ்தர் திமுது ஆட்டிகல மற்றும் திருகோணமலையில் அன்புவெளிபுரம் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் ராமசாமி (28) என்பவர் மற்றும் வத்தளையில் வாகன வியாபாரி ஒருவர் ஆகியோர் கடத்தப்பட்ட சம்பவங்கள் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. மீண்டும் ஆட்கடத்தும் வெள்ளை வேன் கலாசாரம் தலைதூக்கியுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அப்பாவி மக்களைப் பொறுத்தவரை மிகமிக இறுக்கமாகவுள்ளதாக நம்பப்படும் இக்கால கட்டத்தில் மிகச் சாதாரணமாக நடந்தேறும் இவ்வாறான சம்பவங்கள் அச்சத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்துவது வழமையாகும்.

இவற்றுக்கு பொறுப்புச் சொல்லவேண்டியது அரசாங்கமாகும். அரசாங்கத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்த எத்தனிப்பவர்கள் அல்லது அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த விரும்புகின்றவர்கள் இதைச் செய்திருக்கலாமென்பதைத் தவிர வேறு என்ன சொல்லப்படலாம்.

இவ்வாறான செயற்பாடுகள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தவே செய்யும். ஏற்கெனவே இலங்கை மீது இவ்வாறான பல குற்றச்சாட்டுக்களை சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் சுமத்திவருகின்ற நிலையில் மீண்டும் அதே தவறுகள் இங்கே நடக்குமாகவிருந்தால், அது தற்போது இருக்கும் இலங்கையின் சர்வதேச நண்பர்களையும் இழக்கச் செய்துவிடும்.

ஏற்கெனவே இலங்கையின் சர்வதேச நண்பர்களுக்கு இருந்த நம்பிக்கை கேள்விக்குறியாகி இருக்கின்றது. இதற்குக் காரணம், யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு மூன்று வருடங்களாகின்றபோதும் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றைக் காணவில்லை என்பதும், அந்தந்த கால கட்டத்தில் இலங்கை அரசு கூறிவந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதுமாகும்.

உலகத்திலேயே தனது முதல் எதிரி நாடுகள் என்றால் அமெரிக்காவும் இந்தியாவும்தான் என்றவாறாக இலங்கையில் சில அரசியல்வாதிகள் கூறிவருகின்றனர். அவர்களின் அரசியல் அறிவை நினைக்கும்போது புல்லரித்துப் போகின்றது.

அவர்களுக்கு சிந்திக்கத் தெரிந்தால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து நடத்தப்போகும் 'மலபார் 2012' நடவடிக்கையைப்பற்றி சிந்திக்கவேண்டும். இருநாட்டு கடற்படையினரும் கடலில் பாதுகாப்பு, கடற்கொள்ளையர் தடுப்பு, தாக்குதல் போன்ற பயிற்சிகளில் ஈடுபடப் போகின்றனர். இந்த நடவடிக்கை நமக்கு உணர்த்தும் செய்தி என்ன? என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

யார் சொன்னாலும், யார் சொல்லாவிட்டாலும் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிலையான நிரந்தரத் தீர்வு காணப்படுவதும், இலங்கையில் வாழும் அனைத்து இனமும் புரிந்துணர்வுடனான ஐக்கிய வாழ்க்கையை வாழ வேண்டும், அதிகாரங்கள் ஒரு இடத்திலோ, ஒரு சமூகத்திடமோ குவிந்து இருக்காமல் மேலே இருந்து கீழாக அனைவருக்கும் பொதுவாக பகிரப்படவேண்டும் என்பதும் மனித உரிமைகள் மதிக்கப்படவும், அது சார்ந்து நடந்த தவறுகளுக்கு பரிகாரம் காணுதல், பொறுப்புச் சொல்லுதல் என்பவற்றை குறிப்பிடத்தக்க அளவாவது மதிக்கும் நாடாக இலங்கை தன்னை அடையாளம் காட்ட வேண்டுமென்பதும் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இதைப்புரிந்து கொள்ளாமல் யாருக்காகவும் நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டோம், யார் சொல்வதையும் கேட்கமாட்டோம், ஆணைக்குழுக்கள் சொல்லும் எல்லாவற்றையும் அமுல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றெல்லாம் கூறுவதைப் பார்க்கும்போது, இலங்கையின் எதிர்காலம் குறித்த கவலை அதிகரிக்கின்றது.

> உலகையாளுமையை உன்னிப்பாக அவதானிக்கின்ற எவருக்கும் தற்போதைய உலகப் போக்கை புரிந்து கொள்ளமுடியும். அதாவது நமது சக்திக்கு மிஞ்சிய தாக்கமொன்று உருவாகிவிட்டால், அதை எதிர்த்து நிற்பதை விடவும், அதிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான சாத்தியமான தடுப்புக்களையே நாடவேண்டும்.
> இது தனிமனிதனுக்கும், ஒரு இனத்துக்கும், நாடுகளுக்கும் பொருந்தும். இல்லாவிட்டால் நாம் எதிர்ப்பின் சுழற்சியில் தூக்கி எறியப்பட்டுவிடுவோம். நம் கண் முன்னே நடந்து முடிந்த பல உதாரணங்களை ஞாபகப்படுத்திக் கொள்வோமாயின் இந்த உண்மை புரியும்.

சர்வதேச சமூகங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையே மதிக்காமல் உதாசீனம் செய்யும் இலங்கை அரசு, தமிழ் மக்களிடம் எவ்வளவு நேர்மையாக நடந்து கொள்ளும், எந்த அளவுக்கு இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களுடன் நேர்மையாக நடந்து கொள்ளும் என்பதையெல்லாம் சந்தேகத்துக்குரிய ஒன்றாகவே சர்வதேச சமூகம் பார்க்கப்போகின்றது என்கின்றனர் அவதானிகள்.

உலகையாளுமை உன்னிப்பாக அவதானிக்கின்றவருக்கும் தற்போதைய உலகப்போக்கை புரிந்து கொள்ளமுடியும். அதாவது நமது சக்திக்கு மிஞ்சிய தாக்கமொன்று உருவாகிவிட்டால், அதை எதிர்த்து நிற்பதை விடவும், அதிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சாத்தியமான தடுப்புக்களையே நாடவேண்டும்.

இது தனிமனிதனுக்கும், ஒரு இனத்துக்கும், நாடுகளுக்கும் பொருந்தும். இல்லாவிட்டால் நாம் எதிர்ப்பின் சுழற்சியில் தூக்கி எறியப்பட்டுவிடுவோம். நம் கண்முன்னே நடந்து முடிந்த பல உதாரணங்களை ஞாபகப்படுத்திக் கொள்வோமாயின் இந்த உண்மை புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு இனம் மொழி ஒரு கொண்டாட்டம்

## வரலாற்று ஆய்வு

**எமது** இலங்கை தமிழ சிங்கள மக்களின் வரலாறு 2000 வருடங்கள் பின்னோக்கிப் பார்த்து எமது மக்களின் அடிப்படைகளில் உள்ள ஒற்றுமைகளை முன்கொண்டு வரவேண்டிய தேவை இன்று உருவாகியுள்ளதும் எமது இலங்கை மக்களுக்கான ஒன்றிணைந்த தமிழ, சிங்கள மக்களுக்கான பொதுவான இலங்கையர் என்ற அடையாளத்தையும் அதனுள்ளே தமிழர்கள் என்ற அடையாளத்தையும் உருவாக்க வேண்டும்.

வரலாற்றில் எவ்வளவு உண்மைகள் இருந்த போதிலும் இன்றுள்ள நிலைமைகளில் உள்ள உண்மையின் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படும் யதார்த்த பூர்வமான மாற்றங்களையும் இணைத்து செயற்படுவது முக்கியமானது. இவை இரு மொழிகள் பேசும் ஒரே இன இலங்கை மக்கள் என்ற அடையாளத்தை தோற்றுவிக்க மூலகாரணமாகவும் இருக்கக்கூடும் எனப்பலர் நம்ப ஆரம்பித்துள்ளனர்.

எதிர்காலத்தில் எத்தனை மாற்றங்களை இயற்கையும் மனித வாழ்வு சூழலும் ஏற்படுத்தப் போகின்றனவோ என்ற கற்பனையில் மிதப்பதைவிட இன்றே இலங்கையில் உள்ள மக்களிடையேயான இன உறவுகளை பேணும் பணிகள் மிகவும் முக்கியமாகின்றது. இலங்கை வரலாற்றின் ஆரம்ப காலங்களிலிருந்து மிக நீண்டகாலமாக இலங்கைத்தீவில் ஒரே இனமக்களே வாழ்ந்து வந்துள்ளதும் இவர்களின் வாழ்க்கையும் தென் இந்திய பிராந்திய தொடர்புகளும் இலங்கையில் காலத்துக்குக் காலம் மாற்றங்களை கொண்டுவந்திருந்தது. இந்த மாற்றங்களை சில சந்தர்ப்பங்களில் முரண்பாடுகளையும் சில சந்தர்ப்பங்களில் உடன்பாடுகளையும் ஏற்படுத்தியிருக்கும். இப்படியான முரண்பாடுகளும் உடன்பாடுகளும் இலங்கைத்தீவில் இன்றுள்ள சமூகத்தில் அடிப்படையிலும் சில மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றது என்பது உண்மையாகும்.

அண்மைக்கால மரபணுச் சோதனைகளும், வரலாற்று ஆவணங்களின் நிருபணச் சான்றுகளும் இலங்கையில் வாழும் இரு மொழிபேசும் குடும்பத்தினரும் ஒரே இரத்த உறவினர் என்பதை நிரூபித்து அதிலும் இலங்கையில் உள்ள எல்லா மக்களும் தென் இந்திய மக்களின் மிக நெருங்கிய உறவினர்கள் என்றும் இவர்கள் மிக நெருக்கமான திராவிட இனத்தவர்கள் என்றும் மரபணுக்கள் உண்மையை எடுத்தியம்பியுள்ளது. இவை தமிழ் சிங்கள மக்களிடையேயான வரலாற்று தொடர்புகளின் நெருக்கத்தை நினைவூட்டி இலங்கையில் உள்ள இவர்கள் தம்மை ஒரு இனமாக ஒரு புதிய இலங்கைத்தீவின் இலங்கையர் என்ற இனமாக மீளிர முடியும் என்பதை பறை சாற்றுகின்றது. இந்த வரலாற்று உண்மையும் எமது வாழ்வின் புதுவருட தினக் கொண்டாட்டமும் இன்று வெளித்தெரியும் இனங்களுக்கிடையிலான இடைவெளிகள் மிகக்குறுகியனவைகளே என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு வருடமும் தென்இந்திய, திராவிட, தமிழ், சிங்கள மக்களும் ஒரே காரணங்களுக்காக புதுவருட தினத்தை கொண்டாடுகின்றனர்.

இந்துக்களின் காலங்களில் பின்னர் இந்தியாவிலிருந்த கூடத்தமிழ்க்கைகளை வந்து மாற்றங்களை இந்திய தத்துவங்களுக்கு கொண்டுவந்து வந்துபிற கொடுத்தவர் புத்தர். இதனால் இந்திய தத்துவம் உலக நாத்திற்கு புத்தரும் உலகின் முதல் தத்துவஞானியாகவும் போற்றப்பட்டார். வட இந்திய பிரதேசங்களுக்கு அப்பால் புத்தரின் போதனைகளால் தென் இந்தியாவும், தென் இந்தியாவிலிருந்து இலங்கையும் மக்கள் கிறிஸ்துவுக்கு முன் 700 வருடங்களிலிருந்து 7ஆம் நூற்றாண்டுகள் வரையில் பௌத்தத்தை தழுவியிருந்ததிற்கான வரலாற்றுச் சான்றுகள் தாராளமாக உள்ளன. கிட்டத்தட்ட 1500 வருடங்கள் இலங்கையில் தமிழர்கள் பௌத்தமதத்தையே தழுவியிருந்துள்ளனர்.

இலங்கையில் தொன்மையான காலம் தொட்டு வாழ்ந்தவர்கள் இந்துக்கள் சைவர்களாகவும் இவர்கள் பின்னர் பௌத்தர்களாகவும் மீண்டும் சைவர்களாகவும் மாறி மாறி மதம்மாற்றம் நடைபெற்று வந்துள்ளதும் இப்படியாக மாறி மாறி மதமாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் தமிழர்களால் பௌத்த சமயத்திற்கு பாரிய பங்களிப்புக்கள் செய்யப்பட்டிருந்துள்ளது என்பது வரலாற்று உண்மையாகும். இப்படியான மாற்றங்கள் ஏற்பட்டுக்



நன்றி : இணையம்

கொண்டிருந்த காலத்திலேயே சிங்கள மொழியின் வருகையும் ஏற்பட்டு சிங்கள மொழி பேசும் மக்கள் என்ற இனம் செழுமைபெற்று வளர்ந்து கொண்டது.

இந்தக் காலத்திலேயே தமிழ் பௌத்தர்களால் பௌத்தம் உன்னத நிலையில் இருந்தது. இக்காலத்திலேயே பௌத்தம் தனது வரலாற்றில் மிக உயர்ந்த மிக உன்னத மகா காவியமான மணிமேகலையை தமிழ்மொழி பௌத்தத்திற்கு வழங்கியிருந்தது. இன்று சிங்கள மொழி பெயர்ப்பில் சிங்கள பௌத்த மக்களின் காவியமாக பேணப்படுவதுமாகும். இதே காலத்தில் தமிழர்களால் தமிழ் பௌத்தர்களால் படைக்கப்பட்ட பௌத்த காவியங்களான உதயணன் கதை, குண்டலகேசி, நீலகேசி விரசோழியம் ஆகிய காப்பியங்கள் தமிழர் நாகரிகங்களின் உச்ச நிலையைபும் தமிழர்களின் பௌத்த கடுமைப்பற்றும் இன்னுமொரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இவற்றிக்கும்மேலாக தமிழ் பௌத்தஞானிகளான புத்த கோசர் - விசுத்திமார்கம் என்ற நூலை பாளி மொழியில் இயற்றினார். இவற்றைவிட புத்த தத்தர், மதுரத்த விளாசினி, வினய விநிச்சயம், உத்தர விநிச்சயம், ருபாருப விபாகம் ஆகிய பௌத்த நூல்களையும் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் ஜினாலங்காரம், தந்த தாது, போதிவம்சம், ஆகிய நூல்களையும் பின்னர் அபிதம்மாவதாரம் என்ற இன்று பௌத்தர்களால் போக்கிசங்களாக பாதுகாக்கப்படும் காவியத்தையும் படைத்துள்ளார்.

ஆரிய தருமபாலர் - கி.பி ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தின் பௌத்த மகாவிகாரையின் மகாதேரராக இருந்து பௌத்தப் பள்ளிகள் வைத்திருந்த பழைய தமிழ் உரைகளையும் இலங்கையிலிருந்த பாளி உரை நூல்களையும் ஆராய்ந்து திரிபிடகத்திற்கு பதினான்கு உரைகளை எழுதி வழங்கியவர். அநிருத்த தேரர் பாண்டிய நாட்டில் மதுரையிலிருந்த சோம விகாரையின் தலைவராக இருந்தவர் அநிருத்ததேரர் இலங்கைப் பௌத்த சங்கத்தினராலும், பர்மா பௌத்த சங்கத்தினராலும் படித்துப் பேணப் பட்ட பிரபல பௌத்த காவியம் ராமத்த விநிச்சயம், நாமரூபச் சேதம் போன்ற பல நூல்களை எழுதியவர்களாகும்.

காசியப்ப தேரர் போன்ற தமிழ் தேரர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் பல பௌத்த காவியங்களையும் நூல்களையும் பௌத்த வழிகாட்டிகளையும் தமிழிலும் பாளியை படித்து பாளியிலும் சிங்கள மக்களுக்கு தந்திருந்தனர் காஸ்யப தேரர் என்ற தமிழ் பௌத்த தேரரால் எழுதப்பட்ட விமதிவிச்சேதனி, விமதிவிநோதினி, மோகவிச்சேதனி, அநாகத வம்சம் ஆகிய பௌத்த தர்ம உரை நூல்கள் இலங்கையில் பௌத்த சங்கத்தினரால் பேணப்படும் இலக்கியங்களாகும்.

பௌத்தம் தழைத்தோங்கிய காலத்தின் இறுதியில் பௌத்தத்துக்கும் சமணர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாதத்தினால் சைவர்கள் மீண்டும் தலைத்து சைவத்தை தென் இந்தியாவிலும் இலங்கையின் வடகிழக்கிலும் இதர இலங்கையின் பிரதேசங்களிலும் பரப்பினர். இக் காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட குழப்பங்களும் இதன் பின்னர் அரச பரம்பரையிரால் ஏற்பட்ட மாற்றங்களும் இரு பிரிவினராக ஒருபுறம் சைவர்கள் என்றும் மறுபுறம் பௌத்தர்கள் என்றும் வளர்ச்சிகள் ஆரம்பித்து இன்றுள்ள சமுதாயமாக உருவெடுத்தது. இக்காலத்தின் பின்னரும் இலங்கையில் ஆட்சிபுரிந்த இந்து அரசர்களாலும் பௌத்த அரசர்களாலும் இரு தரப்பு சமயத்தவர்களுடனும் உறவுகளும் ஒத்தாசைகளும் இருந்துள்ளன. இவற்றிற்கான சான்றுகளாக இன்றும் இலங்கையின் பல இந்துக் கோவில்கள் அதன் பூஜை முறைகளும் உள்ளன. இதைவிட இன்றும் பௌத்த மக்களுமார்களும் பௌத்தமக்களும் இந்து தெய்வக் கோட்பாடுகளை மதவழிபாடுகளை அனுசரிப்பது சாதாரண விடயமாக உள்ளது.

இலங்கையில் உள்ள சிங்கள தமிழ் மக்களின் மதரீதியான இணக்கப்பாடுகளும் மொழிரீதியான இணக்கப்பாடுகளையும் கொண்டவர்கள். கண்டியின் கடைசி மன்னான கண்ணுச்சாமி என்ற இயற்பெயர் கொண்ட சிறிவிக்கிரமராஜ சிங்கன் என்ற தமிழனை கொண்ட சிங்கள மக்களின் ஒரே அடிப்படையிலிருந்து உருவானவர்களே என்பதை புரிந்து கொள்ளத் தவறவிடக்கூடாது.

இந்த உண்மையின் அரத்தனாக இருப்பதில் தமிழ் சிங்கள புதுவருட தினக் கொண்டாழும் ஒன்றாகும். புதுவருட தினக் கொண்டாட்டம் தென் இந்திய மக்களுடனும் தொடர்புடையது என்பதும் இலங்கையில் உள்ள பல பௌத்த விகாரைகளுடனும் இந்து கோவில்களின் தொடர்புடன் உள்ளதும் வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்துகின்றது. புதுவருட தினம் தமிழர் சிங்கள மக்களுக்கான பொதுவான தினமாகவும் இந்த பெருதினம் இந்த இரு இனத்தின் பொது பொதுவான இனத்தில் இருந்து உருவானவர்கள் என்பதின் அடையாளமாக இன்று வரையில் உள்ளதும் இந்த புதுவருட தினத்தையும் எமது இந்து பௌத்த (தமிழ்-சிங்கள) மக்களின் பெரு விசேட தினமான பௌர்ணமி தினத்தையும் ஒவ்வொரு மாதமும் இன இணக்க இரு இனத்தின் பொது அடையாளமான இலங்கை மக்கள் (சிறிலங்கா) மக்களின் பொதுவான அடையாள தினமாகவும் கடைப்பிடிப்பதற்கு இருதரப்பினரும் இணைந்து செயற்படல் வேண்டும்.


இந்த செய்திகள் நாம் தமிழர்கள் இலங்கையில் பௌத்த தத்துவத்தின் பின்னணியில் இருந்துள்ளதையும் பௌத்தத்திற்காக தமிழ் மொழியின் பங்களிப்புக்கள் பற்றி தமிழ் மக்களுக்கும் புரியவைக்க வேண்டும். இதன் மூலம் தமிழர்கள் பௌத்தத்தின் மீதுள்ள கருத்தில் மாற்றம் கொண்டுவரப்படல் வேண்டும். இதே போன்று சிங்கள மக்களுக்கும் தெரிவிப்பதன் மூலம் தமிழர் மீதுள்ள உறவையும் பற்றுதலையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

இதற்கு நல்ல உதாரணமாக உள்ளவற்றில் மிகவும் முக்கியமானது தமிழ் மதுரை கூலவாணியின் சாத்தனார் எழுதிய மணிமேகலைக்கு நிகரான இன்னொரு தமிழ் பௌத்த காவியம் உலகின் வேறெந்த மொழியிலும் இன்றுவரை உருவாக்கப்படவில்லை. இந்த மணிமேகலை இன்று சிங்களமொழியில் மொழி பெயர்ப்பு செய்து மிகமுக்கிய சிங்கள பௌத்த காவியமாக சிங்கள மக்களால் போற்றப் படுவதையாகும் சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டும் தமிழர் நாகரிகத்தின் உச்ச நிலையை இந்த உலகத்திற்கு எடுத்து இயம்பும் காவியங்கள் என்பதை எமது தலைவர்கள் தமது புதுவருட தினங்களில் தமிழ் சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

இதன் மூலமே இலங்கையில் உள்ள மக்கள் தமக்கிடையிலான இன உறவுகள் மிகவும் பழமை வாய்ந்தவைகள் என்பதையும் எம்மிடையே உள்ள இனமுரண்பாடுகள் அர்த்தமற்றவைகள் என்று புரிய ஆரம்பிப்பார்கள். இதன்மூலமே மக்களின் சுய அறிவையும் அதற்கான தேடலையும் அவர்களில் இளம் பருவத்தினர் வயது வரும் காலத்திலாவது புரிய ஆரம்பிப்பார்கள் எனப் பலரும் நம்புகிறார்கள். இவை ஒரு சிறிய முயற்சிகள் எனக் கருதலாம் ஆனால் தமிழ், சிங்கள மக்கள் தததமது இன உணர்வுகள் உந்தப் பட்டே இயங்குகிறார்கள் அவர்களது இன உணர்வுக்குள் உட்கட்டப்பாக உள்ள இந்த வரலாற்று ஆதாரங்களை புரிய வைத்து இலங்கையில் தமிழ் சிங்கள மக்களின் ஒரே இன ஒரே குல அடிப்படையை புரிய வைக்க முடியும் எனப் பலரும் நம்புகின்றனர்.

பௌத்த கோவில்களிலும் காளியும் நவக்கிரக, கணேச பூசையும் நடைபெறுவது வழக்கமான ஒன்றாக உள்ள போதும் இலங்கை பௌத்தர்கள் இந்துக் கடவுள்களை மதிப்பளித்து வருவதும் எமது இனங்களிடையேயான அடிப் படையில் உள்ள உறவினையே எடுத்துக் காட்டுகின்றது.

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லேடீஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

# "கூண்டுப் பறவை பாடுவதேன் என நானறிவேன்"

'அமெரிக்காவின் மிகப் பிரபலமான கறுப்பினப் பெண் சுயசரிதையாளர்" என்று அறிஞர் ஜோனே எம்.ப்ரக்ஸடன் அவர்களால் புகழாரம் சூட்டப்பட்ட கலாநிதி மாயா அஞ்சலோவின் சுயசரிதை நூல்தான் இவ்வளவு கவித்துவமான ஒரு தலைப்புடன் வெளிவந்துள்ளது.

மாயா அஞ்சலோ - புகழ்பெற்ற கவிஞர், கல்வியாளர், நாவலாசிரியை, நாடகாசிரியை, படத்தயாரிப்பாளர், பத்திரிகையாளர், வரலாற்றாசிரியர், மனித உரிமைப் போராளி என்று பன்முக ஆளுமைகளின் சங்கமம். 'உலகின் புத்துயிர்ப்பான பெண்' (global renaissance woman) என்று போற்றப்படும் இவர், 1928 ஆம் ஆண்டு ஏப்ரில் 4ஆம் திகதி அமெரிக்காவின் மிசோரி மாவட்டத்தில் உள்ள புனித லூயிஸ் எனும் இடத்தில் பிறந்தார். இவரது இளம்பருவம் மற்றொரு அமெரிக்காவில் அக்கால கட்டத்தில் தலைவிரித்தாடிய நிறவெறியின் கொடுங்கரங்களில் இருந்து அவரும் அவர் குடும்பமும் தப்பிவிடவில்லை. கறுப்பினத்தவரான அவர்கள் நிறவெறிச் சமுதாயத்தில் மிகுந்த இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தது.

தன்னுடைய வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களை உள்ளடக்கிய ஆறு சுயசரிதை நூல்களை இவர் வெளியிட்டுள்ள போதிலும், "கூண்டுப் பறவை பாடுவதேன் என நானறிவேன்" (1969) என்ற நூலே உலகத்தின் கவனத்தை அதிகம் ஈர்த்த அஞ்சலோவின் நூலாகும். இதில் அவர் தன்னுடைய 17 வயது வரையான வாழ்க்கை அனுபவங்களைப் பதிவுசெய்துள்ளார். இந்த நூல் அமெரிக்காவின் தேசிய புத்தக விருதுக்கும் பரிந்துரை செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

தன்னுடைய வெளிப்படையான எழுத்தின் மூலம் கறுப்பின அல்லது ஆபிரிக்க - அமெரிக்கப் பெண்களுடைய உண்மை நிலையை வெளிப்படுத்தி, அவர்களுக்கான அடையாளத்தைப் பெற்றுத் தர முனைந்த மாயா அஞ்சலோவின் "Wouldn't take nothing for my journey now" என்ற நூல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. அடிப்படையான மனித விழுமியங்கள் குறித்து அலசப்படும் இந் நூலில், பெண்ணொருத்தி தான் பெண்ணாக இருப்பதன் அர்த்தம் குறித்து அழகாக விவரிக்கின்றார்.



"என்னிடம் பெண்மைவாதம் (womanism) பற்றிக் கேளுங்கள், சொல்கிறேன். எனக்கு அதைப் பற்றித் தெரியும். பெண்ணியவாதம் (feminism) பற்றி எனக்குத் தெரியாது. சிலவேளைகளில் அது வரவேற்கத்தக்க ஒன்றாக இல்லை" என்று அவர் குறிப்பிடுகின்றார்.

"தன்னுடைய பன்முக ஆளுமைகளுக்காக சுமார் 30இற்கும் மேற்பட்ட கௌரவப் பட்டங்களை வென்றுள்ள மாயா அஞ்சலோ, தன்னுடைய கலை-இலக்கிய ஆற்றல்களுக்காக மட்டுமின்றி பல்வேறு சமூகப்பணிகளுக்காகவும் உலகின் போற்றுதலுக்குரிய ஒரு பெண்மணியாகக் கருதப்படுகின்றார். இதனாலேயே 1993 அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் தன்னுடைய பதவியேற்பு வைபவத்தில் கவிதை பாடுவதற்கு மாயா அஞ்சலோவைத் தெரிவுசெய்தார். "அதிகாலைப் பொழுதின் நாடித்துடிப்பில்... (On the Pulse of Morning)" என்ற புகழ்பெற்ற கவிதையை வெள்ளை மாளிகையில் அவர் வாசித்தார். 2011 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவால் சுதந்திரத்துக்கான ஜனாதிபதி விருதான தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

பல்வேறு கொடூரமான அடக்குமுறைகளை எதிர்கொண்ட கறுப்பின சமுதாயத்தில் பிறந்த இந்தப் பெண்மணி, தன்னுடைய வாழ்நாளில் வெற்றி அடைந்தக் கனி சுவைத்திட பெரும் புகழையும் கௌரவத்தையும் மிக இலகுவாக அடைந்துவிடவில்லை. தன் வாழ்க்கை முழுவதும் எண்ணிலடங்காத துன்ப துயரங்களை எதிர்கொண்டும் சளைக்காது போராடி, தன்னுடைய ஆற்றல்களை, ஆளுமையை மேம்படுத்திக்கொண்ட அபாரமான பாடுபட்டதன் பிரதிபலனே இன்று அவருக்குக் கிட்டின. தன் வாழ்க்கையில் எதிர்கொண்ட துன்ப துயரங்களை, ஏமாற்றங்களை, வலிகளை, சந்தித்த மனிதர்களை, பெற்ற அனுபவங்களை எல்லாம் 6 பாகங்களாக வெளிவந்துள்ள தன்னுடைய சுய சரிதையில் படிப்போர் மனங்களைக் கசியச்செய்யுமாறு உயிரோட்டமான மொழி நடையில் அவர் வடித்துள்ளார்.


## பால் பர்பி

### தேவையான பொருட்கள்

பால் - 2 கப்
சீனி - 1 கப்
நெய் - 2 மேசைக்கரண்டி

### செய்முறை

ஏலக்காய் தூள் - அரை தேக்கரண்டி. தண்ணீர், அடிகனமான பாத்திரத்தில் பாலையும் சீனியையும் சேர்த்து கெட்டியாக வரும்வரை கிளறிக் கொண்டு இருக்கவும். பாலில் உள்ள தண்ணீர் எல்லாம் வற்றி, இறுகும் நிலை வரும் போது, அடுப்பை அணைத்து, அந்த சூட்டிலேயே நன்கு கிளறி, ஏலக்காய் தூள்சேர்க்கவும். சுருண்டு வரும் போது, நெய் சேர்த்துக் கிளறி, நெய் தடவிய தட்டில் கொட்டி, சமப்படுத்தி, துண்டுகள் போடவும்.



# கர்ப்பகாலத்தில் பயணம்

## கவனம் அவசியம்

கர்ப்பகாலத்தில் பயணம் செய்ய பாதுகாப்பான மாதம் இரண்டாவது மற்றும் மூன்றாவது மாதத்திலிருந்து ஆறாவது மாதங்கள் வரை மட்டுமே பயணம் செய்துகொள்ளலாம். இந்த கால இடைவெளியில் உள்ள பெண்கள் காலை நேரத்தில் அதிக சுறுசுறுப்புடனும் மிகுந்த ஆற்றலுடன் செயல்படுதால் வீட்டில் இருந்து வெளியில் செல்லும் போது அனைத்து சூழ்நிலைகளையும் அவர்களால் எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல் இரண்டாவது முதல் ஆறாவது மாதம் உள்ள கர்ப்பிணிகளுக்கு இருக்கும்.

கர்ப்பமான ஆரம்பகாலத்தில் அதிக தூரத்தில் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அக்காலகட்டத்தில் தான் கரு வளர்ச்சி அடைகிறது. மேலும் நீங்கள் பயணம் செய்யும் போது குழந்தை அதிலிருந்து நிறையவே வாய்ப்புள்ளது உங்கள் உடல் நலமும் பாதிப்பிருக்குள்ளாகும்.

நீங்கள் கருவுற்ற காலத்தில் பயணம் செய்யும் போது சுவாதீனம் இல்லாத குழந்தை பிறக்க நேரிடலாம், கரு தவறுவதற்கும் நிறைய வாய்ப்புள்ளது. ஒரு வேளை உங்களுக்கு இரட்டை குழந்தையாக இருப்பின் இரு குழந்தைகளும் பாதிப்பிற்குள்ளாகும் என்பதை கவனத்தில் கொண்டு பயணம் செய்ய முடிவெடுக்க வேண்டும்.

கர்ப்ப காலத்தில் பயணம் செய்ய கூடாது என்று சொல்வதற்கு முக்கிய காரணம் உயர் இரத்த அழுத்தம் அல்லது புணர்புழை இரத்த ஒழுக்கு, கர்ப்பம் தொடர்பான சிக்கல்கள், போன்றவை பயணம் ஒத்தி வைக்க பிற காரணங்களாக உள்ளன. நீங்கள் நீண்ட தூரம் பயணம் செய்யத் திட்டமிடப்பட்டு இருப்பின் உங்கள் உடல் நலம் குறித்து மருத்துவரிடம் ஆலோசனை பெற்று செல்வது அவசியம்.

பயணம் பற்றி யோசிக்கும் போது ஏற்படக்கூடிய விளைவுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். சில கர்ப்பிணிகளுக்கு நீண்ட தூரம் பயணம் செய்வதால் காலைக்கம், பசியின்மை, தளர்வு ஏற்படும் மேலும் தேவையான மருந்துகளை எடுத்து கொண்டு பயணம் செய்யலாம். பயணம் செய்வதற்கு முன்பு மருத்துவரிடம் ஆலோசனை பெற்று கொண்டு பயணியுங்கள்.



நீங்கள் கருவுற்ற காலத்தில் பயணம் செய்யும் போது சுவாதீனம் இல்லாத குழந்தை பிறக்க நேரிடலாம், கரு தவறுவதற்கும் நிறைய வாய்ப்புள்ளது. ஒரு வேளை உங்களுக்கு இரட்டை குழந்தையாக இருப்பின் இரு குழந்தைகளும் பாதிப்பிற்குள்ளாகும் என்பதை கவனத்தில் கொண்டு பயணம் செய்ய முடிவெடுக்க வேண்டும்.

# அழகுக்கு அழகு சேர்க்க...

தொன்று தொட்டு முதியோர் காலத்திலிருந்து பாரம்பரியப் பொருளாக பயன்படுத்தப்படும் பொருள்கடலைமா, மஞ்சள்தூள். இரண்டுமே உடல் ஆரோக்கியத்திற்கும், சரும ஆரோக்கியத்திற்கும் அழகு தரக்கூடியவை. ஒரு கிண்ணத்தில் 2கரண்டி கடலைமாவை எடுத்துக் கொண்டு ஒரு சிட்டிகை மஞ்சள்தூள் சேர்த்து கலக்கவும். சிறிதளவு தண்ணீர் ஊற்றி கலந்து முகத்தில் பூசி அரைமணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவி வந்தால் சருமம் மென்மை பெறும்.

அழகை பேணிகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பது கடலைமா. கடலை மாவானது பொலிவிழந்த சருமத்தை இளமையூட்டும். இரண்டு கரண்டி கடலை மாவில் சிறிதளவு தண்ணீர் விட்டு கெட்டியாக பிசைந்து கொள்ளவும். பின்னர் முகத்தில் நன்றாக தடவி ஊறவிடவும். நன்றாக உலர்ந்த பின்னர் குளிர்ந்த நீரில் முகம் கழுவினால் பளிச் என்று இருக்கும். அதேபோல் குளிக்கும் போது கடலைமா பூசி குளித்தால் சருமம் வழுவழுப்பாகும். சுருக்கமின்றி இளமை போடு காட்சியளிக்கலாம்.

இரண்டு கரண்டி கடலைமாவுடன், 4 கரண்டி பால், 2 கரண்டி ரோஸ் வோட்டர் சேர்த்து கலக்கவும். பின்னர் கலவையை நன்றாக முகத்தில பூசவும். பத்து நிமிடம் கழித்து இதனை குளிர்ந்த நீரில் கழுவ சருமம் வெண்மையாகும்.

கடலை பருப்பு 1 தேக்கரண்டி, ஒரு மிளகு இவற்றை எடுத்த ஒரு தேக்கரண்டி பாலில் ஊறவையுங்கள். இதனுடன் கால் தேக்கரண்டி முல்தானி மட்டி பவுடரைச் சேர்த்து கலக்குங்கள். பிறகு இதை முகத்தில் 'பேக்' ஆகப் போடுங்கள். உலர்ந்ததும் குளிர்ந்த நீரில் கழுவவேண்டும் பருக்கள் இருந்த படிப்படியாக மறைந்து போகும்.

சருமம் எண்ணெய் வழிந்து பிசுபிசுப்பாக இருந்தால் அதற்கு கடலை மாவுடன் தயிர் சேர்த்து பேஷியல் போடுவது முகத்தை பொலிவாக்கும். ஒரு கிண்ணத்தில் கடலைமா எடுத்து அதில் தயிர், எலுமிச்சை சாறு ஊற்றி நன்றாக கலந்து முகத்தில் பூசவும் செய்யவும். சில நிமிடங்கள் ஊறவைத்து வெதுவெதுப்பான நீரில் கழுவவும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முகம் பொலிவுபெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் சிலை உடைப்பு

## சந்தேகப் பார்வை?

[illegible]



**பிரகஸ்பதி**

[illegible] முஸ்லிம்களோ அமைந்திருப்பது ஏனைய எல்லாமிலுமோ நிகழ்ந்தமை பட்டக் களப்பு சிலையுடைப்பினை ஆராயலாம்.

மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் பெருந்தலைவரும் சமூகத்தின் சக்தியும் போன்ற, கந்தையாவன மகாத்மா காந்தியின் சிலை, சுவாமி இராமகிருஷ்ண குருவான போன்ற பலரை [illegible] சிலை, மட்டக்களப்பில் மாத்திரமன்றி உலகிலுள்ள தமிழ் அறிஞரும் துறவியுமான விபுலானந்தரின் சிலை மற்றும் பெரும் தமிழ் அறிஞரும் சிறந்த தமிழ் இலக்கியம் கொண்டவருமான பலர் பலர் பெரிதும் மதிப்பளிக்கின்ற ஆகியோரின் சிலை என்பன கடந்த சில நாட்களுக்கு முன் உடைக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவங்கள் பற்றி ஊடகங்களின் அடிப்படையில் சில கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இதே வேளையில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற இச்சிலைகளின் [illegible] முக்கியத்துவம், அதுபோல சிறப்புகள் தெரியாதவர்களின் நடவடிக்கை யாக இதனைப் பார்க்க முடிகிறது.

அண்மையில் இந்தியாவின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. அதனால் இலங்கையை [illegible] முகமாக அன்றைய தினம் [illegible] நகரில் சிலை உடைக்கப்பட்டதாக [illegible]

முதுகில் குத்தப்பட்ட விவேகானந்தர் சிலை அன்றைய தினமே பேசப்படுத் தப்பட்டிருந்தது. அதையடுத்து கடந்த 4ஆம் திகதி உடைக்கப்பட்ட விவேகானந்தரின் சிலைக்குப் பதிலாக ஒரு புதிய சிலை அன்று அந்த எல்லைப் பகுதியில் மிகுந்த ஆரவாரத்துடன் நிறுவப்பட்டது. இதன் எதிரொலியாக நகரின் மத்தியில் சிலைகள் உடைக்கப் பட்டதாக ஒரு சந்தேகம்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரையில், தமிழர்களின் பாரம்பரியங்கள் நிலை நாட்டப்படுவதில் கடந்த யுத்த காலத்தில் கூட பிரச்சினைகள் அவ்வளவு அதிகமாக இருக்கவில்லை, ஆனால் இலங்கையின் யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இருக்கின்ற நிலைமையானது பெரும் சிக்கலானதொரு நெருக்கடியை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது என்றே கருதப்படுகிறது.

அதேபோன்று வாத்தான்குடி - மட்டக் களப்பு எல்லைப் பிரச்சினைகள் அனைப் பிரச்சினைகள் நடைபெறுவதற்கு முன்னோடியாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இருந்தாலும் ஒரு சிலர் தான் ஏன் வந்த சிலர் இச்சிலைகளைச் சேதப்படுத்தினர் என்றும் இம்மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் உடைத்தனர் என்றும் சந்தேகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

[illegible]

என்ற நிலைப்பாட்டில் அல்லாமல் சிறப்பான தொரு வெளிப்படுத்தல் [illegible] இப்பிரச்சினை தீர்க்கப்படுதல் வேண்டும். இனிமேல் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ளவேண்டும்.

ஒரு சமூகம் தன் பொறுத்திருப்பதாக பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதனை மற்றொரு சமூகம் அதன் இயலாமையாகப் பார்க்க கூடாது என்பது மிகவும் தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். ஒதுங்கியிருக்கிற சமூகம் இப்படியே சமூகம் என்று தொடர்ந்து பயணித்த நிலைப்பாடும் வினாக வேறு வகையான தொல்லைகளைத் தருவதும் சமூகம் என்பதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

எது எப்படியானாலும் ஒரு தமிழன் தன் அரசியல் இலாபத்துக்காக மட்டக்களப் பின் பொக்கிஷங்கள் போன்று இருக்கின்ற சிலைகளை உடைப்பானா என்ற கேள்வி தோன்றுகிறது. ஆனாலும் அப்படியான ஒரு வகையில் இவ்வாறான செயற் பாட்டினை ஒரு தமிழன் மேற்கொண்டிருந் தால் அவர் [illegible] சமூகத்திலும் இருந்து ஒதுக்கப்பட வேண்டியவரே என்பது [illegible] கருத்தாக இருக்கிறது.

மட்டக்களப்பு நகரின் மத்தியில் இருந்த சிலைகள் உடைக்கப்பட்டமை குறித்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] கிழக்கு மாகாண சபை உறுப் பினர்களான [illegible] இரா. துரைரெட்ணம், பிரசாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் செயலாளர் [illegible] எனப் பலரும் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொருவரும் தமது கண்டனங்களை யும் கருத்துக்களையும் வெளியிட்டு வந்தாலும் மட்டக்களப்பின் பாரம்பரியத் தினை அழிக்கும் முயற்சியின் சரியான எவரும் இதுவரையில் [illegible] இல்லை என்பதுடன் அதற்கான காரணம் கண்டுபிடிக்கப்படவும் இல்லை என்பது கவலைக்குரியதே.

ஆடம்பரத்தானது என்ற கேள்வியும் இந்த இடத்தில் விடுக்கப்பட வேண்டியது.

ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன் படுத்தாத யாரும் சிறந்து விளங்கியதாகச் சரித்திரமேயில்லை, என்பது சமூகத்துக் கும் நாட்டுக்கும் உலகுக்கும் பொருந்தும். இதனையே இந்த இடத்தில் விட்டுவைக்க விரும்புகிறேன்.

இச் சிலையுடைப்பினைத் தொடர்ந்து சவிக்கிழமை முதல் பொலிஸார் இச்சிலை களை திருத்துவதற்கான வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிலை என் பது தலை உடைந்தால் முழுதாகச் செய் தாக வேண்டும் என்ற நிலைப்பாடு இருக்கை யில் அவசர அவசரமாக பொலிஸார் திருத்திக் கொண்டிருந்தமை மக்களைக் குழப்பத்துக்குள் தள்ளியிருக்கிறது.

சந்தேகங்களைச் சம்பந்தமில்லாது விடுத்தனர். நீதியும் உண்மையான குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் காணப்படும். எனவே குற்றவாளிகள் தப்பித்துச் செல்லாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றே இங்குள்ள [illegible] எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையில் ஆரையம்பதி, காத்தான்குடி எல்லையில் விவேகானந்தர் சிலை அச்சபத்திற்குக் காரணமா, எல்லைப் பிரச்சினை காரணமா, தமிழ் கூட்டமைப்பின் மாநாட்டைக் குழப்பும் திட்டமா, ஜெனிவாவுக்கான எதிர்ப்பா, அல்லது வேறு ஏதாவது நோக்கத்தினை கணக்கிலையும் வைத்தும் குழப்பத்தில் இருக்கும் மட்டக்களப்பு மக்கள் தூண்டி விடப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டும் தெளிவாகும்.

ஒவ்வொரு அரசாங்கமும் நடைபெறும் [illegible] சிலை மாத்திரம் பேசப்படுகின்றது போல, அல்லாமல் மக்களையும் ஒன்றாக விடவும் கிழக்கின் மற்றும் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் உள்ளவர்கள் அனைவரையும் திரும்பிப் பார்க்க சிந்திக்க வைத்திருக்கிறது. இந்த மட்டு நகரின் சிலையுடைப்புக்கள் என்று மாத்திரம் சொல்லிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த ஆண் எப்படி?



சாமுத்ரிகா இலட்சணம் என்பது ஒருவரின் அங்க அவயங்களை வைத்தே அவரின் குணநலன்களைப் பற்றிய விபரங்களைக் கண்டறிவது. பண்டைய கால இலக்கியங்கள், புராணங்கள் மற்றும் சாமுத்ரிகா இலட்சண குறிப்புகளில் ஏராளம். அவற்றில் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

**தலை :** ஆண்களின் தலையானது உயர்ந்தோ, பருத்தோ இருந்தால் செல்வம் உண்டு. பின் பகுதி புடைத்திருப்பின் அறிவு உண்டு. தலையின் நரம்புகள் புடைத்து இருப்பின் தரித்திரம்.

**நெற்றி :** அகலமான, எடுப்பான, உயர்ந்த நெற்றி அமைந்திருப்பின் ஞானமும் செல்வமும் உண்டு. மிகச் சிறுத்திருப்பின் மூடனாவான். நெற்றியில் பல ரேகைகள் இருப்பின் அதிர்ஷ்டம் உண்டாகும். நெற்றியில் ரேகை இல்லா திருப்பின் ஆயுள் குறையும். நெற்றியில் வியர்வை வருமாயின் அதிர்ஷ்டமாம்.

**கண் :** ஆண்களின் கண்கள் சிவந்து, விசாலமாக யானைக்கண் போல் இருந்தால் உலகை ஆள்வான். கோழி முட்டைக்கண்ணும், மிகச்சிறிய கண்ணும் இருப்பின் அறிவு, ஆற்றல் குறைவாக இருக்கும்.

**மூக்கு:** உயரமாய், நீண்டு, கூரிய முனையோடு

சிறிய நாசித்துவாரங்கள் கொண்ட மூக்கு உடையவர்கள் பணம், பதவி, புகழ் உடையவர்களாக இருப்பர். நுனிப் பகுதி தாழ்ந்தோ, நடுப்பகுதி உயர்ந்தோ, பெரியளவில் மூக்கு அமைந்திருப்பின் தரித்திரமாம்

**வாய் :** அழகான, சிறிய வாய் உடையவர்கள் புத்தி, சக்தி, கருணை உடையவர்களாக, அறிஞர்களாக, பெரும்பதவியில் இருப்பவர்களாக இருப்பர். அகன்றும், வெளியே பிதுங்கியும் உள்ள வாய் அதிகமாகப் பேசும். பிறர் செயலில் குற்றம் காணும்.

**உதடு :** உதடு சிவந்திருப்பின் அந்தஸ்து, அதிகாரம் அதிர்ஷ்டம் நிலைத்திருக்கும். கறுத்து, உலர்ந்து, தடித்து இருப்பின் கடன் நிறைந்திருக்கும்.

**கழுத்து:** ஆண்களின் கழுத்து பருத்தும், மத்திம உயரம் உடையதாகவும் இருப்பின் அதிர்ஷ்டமாம். மிக உயரமாகவோ, மிகக் குட்டையாகவோ, நரம்புகள் தெரியும்படியோ இருந்தால் வறுமையாம்.

**தோள் :** தோள்கள் இரண்டும் உயர்ந்திருப்பின் செல்வம் உண்டு. தாழ்ந்திருந்தால் நீண்ட ஆயுள் உண்டு. சமமாக இருப்பின் அறிவு உண்டு. தோள்கள் இரண்டிலும் மயிர் அதிகம் இருந்தால் நினைத்த காரியம் முடியாது.

**நாக்கு:** நீளமான நாக்கு இருப்பின் சிறந்த பேச்சாளர்களாய் இருப்பர். நாக்கு நுனியில் அழியாத கரும்புள்ளிகள் இருப்பின் சொன்ன சொல் பலிக்கும். நாக்கு சிவந்திருப்பின் அதிர்ஷ்டமாம். கறுத்தும், வெளுத்தும், உலர்ந்தும் இருப்பின் தரித்திரமாம்.

**காது :** காது மேல் செவி அகலமானால் முன் கோபம் இருக்கும். காது குறுகியிருப்பின் அதிர்ஷ்டமாம். மேல் செவி உள்ளே மடங்கியிருப்பின் கபடதாரி.

**கைகள் :** நீளமான, சீரான பருமன் உடைய கைகளை உடையவர்கள் சிறப்பாக வாழ்வர். முழங்கால் வரை கை நீண்டிருப்பின் அரசன் ஆவான். தடித்த, குட்டையான கைகளை உடையவர்களை நம்புதல் கூடாது. கைப்பிணைப்புகளில் மூட்டுகளில் ஓசை எழுப்பினால் தரித்திரமாம். கைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருப்பின் பாவிகளாக இருப்பர். கைகளில் நீண்ட உரோமங்கள் இருப்பின் செல்வந்தன் ஆவான்.

**மணிக்கட்டு:** மணிக்கட்டில் சதையிலிருந்து கெட்டியாக இருப்பின் அரசு பதவி கிடைக்கும். மணிக்கட்டு உயரமாக இருப்பின் நீண்ட ஆயுள் உண்டு. மணிக்கட்டுகள் சத்தமின்றி இருந்தாலும், மடக்கும் போது சத்தம் வந்தாலும் தரித்திரமாம்.

**விரல்கள்:** கைவிரல்கள் நீளமாக இருந்தால் கலை ஆர்வம் அதிகம் இருக்கும். காம இச்சை அதிகம் உண்டு. விரல்களுக்கு மத்தியில் இடைவெளி இருந்தால் தரித்திரமாம். உள்ளங்கை அதிகப் பள்ளமாக இருந்தால் அற்ப ஆயுளாம். உள்ளங்கை சிவந்திருந்தால் தனவான் ஆவான். உள்ளங்கையின் நான்கு மூலைகளும் சமமான உயரத்தோடு தட்டையாக இருப்பின் அரசனாவான்.

**மார்பு :** ஆணின் மார்பு விசாலமாகவும், சதைப் பிடிப்போடும் இருப்பின் அவன் புகழ் பெற்று விளங்குவான். கோணலாகவும், ஒன்றோடொன்று நெருங்கியும் இருப்பின் அற்பாயுளாம். ஆணின் மார்பகங்களில் உரோமம் இல்லாதிருப்பது ஆகாது. அதிகமான உரோமம் இருப்பின் இச்சை அதிகம் இருக்கும்.

**வயிறு :** பானை போன்ற உருண்டையான வயிறு இருப்பின் செல்வம் இருக்கும். வயிறு தொங்கினால் மந்த நிலை உண்டாகும். ஒட்டிய வயிற்றைப் பெற்றவர்கள் குபேரனாய் இருப்பர். வயிற்றில் மடிப்புகள் இல்லாதிருப்பதே உத்தமம்.

**முதுகு :** சமமான முதுகைப் பெற்றவர்கள் எதிலும் வெற்றி பெறுவர். முதுகில் எலும்புகள் காணப்பட்டால் தரித்திரமாகும்.

**கால்கள் :** கால்கள் நீளமாக இருந்தால் அரசாங்க விருதுகள் பெறுவான். கால்கள் குட்டையாக இருப்பின் தரித்திரனாம். முழங்காலுக்கு மேலே உயரமாகவும், முழங்காலுக்குக் கீழே குட்டையாகவும் இருந்தால் நன்மைகள் பெருகும்.

**கால்பாதம் :** கால் விரல்கள் ஒன்றோடொன்று நெருங்கி இருப்பின் புகழ் பெறுவான். பாதங்கள் சதைப் பிடிப்பின்றி அழகாக, அளவாக இருக்க வேண்டும். பாதங்களில் மேடு, பள்ளம் இருந்தாலும், நகங்கள் கோணல்மாணலாக இருந்தாலும், விரல்கள் தனித்தனியே விலகியிருந்தாலும் வறுமை வாட்டும்.

# யாருக்கு ஆசை குறையும்?



மன இறுக்கத்தில் இருப்பவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டிருப்பவர்களுக்கும் திறன் குறையும். பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் ஆசை குறைகிறது. சிலருக்கு மாதவிடாய் காலத்தில் ஆசை குறையும். குறிப்பிட்ட சில நோய்களுக்கு சாப்பிடும் மருந்துகளாலும் தற்காலிக குறைபாடு ஏற்படுவதுண்டு.

பாலுறவில் விருப்பம் இல்லாமல் இருக்கும் ஆண்களில் 40 சதவீதம் பேர், தங்களுக்கு ஒற்றைத் தலைவலியால் ஆசை குறைகிறது என்று குறிப்பிடுகிறார்கள். நீரிழிவு நோயாளிகளைப் பொறுத்தவரையில், நாட்பட்ட நிலையில் அதிக களைப்பு, மயக்கம், படபடப்பு போன்றவைகள் தொடர்ந்து கொண்டிருந்தால் அவர்களால் செக்சில் நாட்டம் செலுத்த முடிவதில்லை. உறவின்போது அவர்களுக்கு தாமாக சிறுநீர் கசிவதும் புதுவித நெருக்கடியை உருவாக்கும். அவர்களுக்கு இரத்த ஓட்டம் போதிய அளவில் இருக்காது. சீராகவும் இருக்காது. அதனால் அவர்களது மூளை தேவையான இரசாயன மாற்றங்களை ஏற்படுத்தாது. அவர்களது துணைவர்கள் தான் வயது மூப்பின் காரணமாக தாம்பத்திய திறன் குன்றியவர்களாகிறார்கள்.

செக்ஸ் ஆர்வமின்மை தம்பதிகளில் இருவருக்கோ ஒருவருக்கோ ஏற்பட்டால் முதலில் அவர்கள், இதுவும் ஒரு நோய்த் தன்மை போன்றதுதான். இதற்கும் மருத்துவ விஞ்ஞானத்தில் தீர்வு இருக்கிறது என்று நம்ப வேண்டும். பின்பு அந்த ஆர்வமின்மை மனரீதியான பிரச்சினையா? உடல்ரீதியான குறைபாடா என்பதை மருத்துவ ரீதியாக கண்டறிய முன்வர வேண்டும்.

# ஆர்வத்தை அடக்கும் ஆபாசப் படங்கள்





ஆபாசப் படங்களைப் பார்ப்போரால் சிறப்பாக செயல்பட முடியாதாம். ஒரு ஆய்வு எச்சரிக்கிறது. அதாவது பாலுறவு விஷயங்களை வீடியோவில் பார்ப்பதில் அதிக ஆர்வம் காட்டும் நபர்களால் உண்மையில் செயல்பாடுகளில் முழுமையாக, சரியாக நிறைவேற்ற முடியாமல் போய் விடுகிறதாம். இதனால் பல பிரச்சினைகளுக்கு அவர்கள் ஆளாவதாக கூறப்படுகிறது.

வீடியோவில் உறவுகளைப் பார்ப்பதில் இருக்கும் ஆர்வத்தில் போதியளவு கூட ஆண்களால் படுக்கை அறையில் காட்ட முடிவதில்லையாம். இதற்கு முக்கிய காரணம், மூளையின் உற்சாக மையத்தை தூண்டிவிடக் கூடிய ஹோர்மோனான டோபமைன் அபரிமிதமான அளவில் சுரப்பதே. அடிக்கடி ஆபாசப் படங்களைப் பார்த்து உணர்ச்சிவசப்படுவோருக்கு டோபமைன் அதிக அளவில் சுரந்து, சுரந்து கடைசியில், உண்மையான இன்பத்தை அனுபவிக்க நேரிடும்போது அதனால் பலன் இல்லாமல் போய்விடுகிறதாம்.

இப்படி ஆபாசப் படம் பார்த்து உண்மையான உற்சாகத்தையும், இன்பத்தையும் தொலைத்து நிற்கும் பலரும் தமது இன்ப விளையாட்டில் பூரண திருப்தி அடைய முடியாமல் அவதிப்படுகின்றனர். அதிக அளவிலான செக்ஸ் நடவடிக்கைகளைப் பார்த்துப் பார்த்து இவர்கள் மனரீதியாக களைத்துப் போய்விடுகின்றனர். அதில் ஒரு சலிப்பும், அலுப்பும் வந்துவிடுகிறது. இதுவே பாதிப்புக்குக் காரணம் என்கின்றனர் துறைசார் வல்லுநர்கள். இப்படிப்பட்டவர்கள் படிப்படியாக ஆபாசப் படம் பார்ப்பதை நிறுத்திக் கொள்வது நல்லதாம். அதை நிறுத்த முடியாதவர்களுக்கு மருந்து, மாத்திரைகள், கவுன்சிலிங் தேவைப்படுகின்றது. எனவே வாலிப வயோதிகர்களே, எப்போதும் இதனை நம்பாதீர்கள். தேவைப்படும் போது நிஜத்தை நாடுவதே மனநலனுக்கும், உடல் நலனுக்கும் நல்லது

# சிவப்பு! சிலிர்ப்பை அதிகரிக்கும்



காதலர் தினத்தில் காதலிக்கும் நபருக்கு பரிசாக சிவப்பு ரோஜா கொடுப்பது பாரம்பரிய வழக்கமாக உள்ளது. அதேபோல் தனது காதலி சிவப்பு நிற உடையணிந்து வருவதை பார்த்தால் அந்த ஆணுக்கு காதல் உணர்வும் கூடவே காம உணர்வும் தூண்டப்படுகிறதாம். இது தொடர்பாக நடைபெற்ற ஆய்வில் ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

அதேசமயம் கவர்ச்சியாக உடை அணியும் பெண்களைக் கண்டால் ஆண்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறதாம். இதனால் அவர்களின் ஆண்மை கூட பறிபோகும் ஆபத்து இருப்பதாக தெரிகிறது. அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் முப்பது வருடங்களாக நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

ஐம்பது வயதுக்கு மேலான ஆண்களில் 60 வீதமானோர் புரோஸ்டேட் புற்றுநோயால் தாக்கப்படுகிறதும். முப்பது வயதுக்கு மேற்பட்ட 35 வீதமான ஆண்களிடம் இந்த புற்றுநோய் அறிகுறி மற்றும் ஆண்மைக்குறைவு இருப்பதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு காரணம் பெண்களின் கவர்ச்சிகரமான ஆடை அணியும் கலாசாரம்தான் என்கின்றனர் ஆய்வாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய பிறகு வருந்துவதைவிட பேசுவதற்கு முன்பே யோசனை செய்வது நல்லது - டேவிட் ஹியூம்

## வாரம் ஒரு திருக்குறள்



**அழுக்காறாமை**

**அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார் வழுக்கியும் கேடீன் பது.**

பொறாமை உடையவர்க்கு வேறு பகை வேண்டா, அஃது ஒன்றே போதும், பகைவர் தீங்கு செய்யத் தவறினாலும் தவறாமல் கேட்டைத் தருவது அது.

குறள்:165

## தகவல் களஞ்சியம்

* இங்கிலாந்து ஈரான் நாடுகளின் தேசிய சின்னம், ரோஜாமலர்.

* நமது தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டதாகும்.

* நில நடுக்கத்தின் கடுமையை துல்லியமாக அறிந்து கொள்ள "ரிக்டர் ஸ்கேல்" என்ற கருவி பயன்படுகிறது.

* இந்திய ரூபாய் நோட்டுகள் நாசிக் நகரத்தில் அச்சடிக்கப்படுகிறது.

* உலகிலேயே மிகப் பழமையான பல்கலைக்கழகம் மொராக்கோ நாட்டில் உள்ளது.

* சாகித்திய அகாடமி பரிசு பெற்ற முதல் தமிழ் புத்தகம் ரா.பி.சேதுப்பிள்ளை எழுதிய தமிழ் இன்பம்.

## இரண்டு காலில் நடக்கும் நாய்



சீனா நாட்டைச் சேர்ந்தவர் சூஹோ குயான் ஷுன். இவர் ஜு ஜு என்ற பெயரில் ஒரு குட்டி நாய் ஒன்றை வளர்த்தார். அது 4 மாத குட்டியாக இருந்த போதே மனிதர்களைப் போல் 2 கால்களில் நடக்க அதை பழக்கினார். இவ்வாறு நடை பழகிய ஜு ஜு அதன் பின்னர் எப்போதும் மனிதர்களைப்போல 2 கால்களில் நடக்கவே விரும்புகிறது. மேலும் சூஹோ பழக்கியபடி ஒரு சிறிய கைப்பையை தனது முன்னங்காலில் ஏந்தியபடி கம்பீரமாக நடை போடுகிறது.

## வண்ணக் குடை!

வாங்க வாங்க வாங்க
வண்ணவண்ணக் குடையை வாங்கிப் போங்க!
பெருசுகளுக்கு அகலக்குடை
கருநிறமாய் இருக்குதுங்க!

சிறுசுகளுக்கு சின்னக்குடை
சிங்காரமாய் இருக்குதுங்க!
கைக்கு அடக்கமாய் இருக்குமுங்க
விரல்பட்டால் பெரிதாய் விரியுமுங்க

வெயில் சூடு போக்குமுங்க
வியர்வை வராமல் காக்குமுங்க!
மழை நேரத்திலும் உதவுமுங்க – உங்க
புத்தகம் நனையாமல் காக்குமுங்க!

பிடித்த வண்ணத்தில் எடுத்திடுங்க
வெயிலிலும், மழையிலும் தப்பியுங்க!

## பொறாமை



கரந்தானேரி ஓர் அழகிய கிராமம். அங்கு தெய்வநாயகம் என்ற குடியானவன் வசித்து வந்தான். அவன் வீட்டில் ஆடு, மாடு, கிளி, கோழி, பூனை, நாய் எனப் பல பிராணிகளும் வளர்க்கப்பட்டன.

தெய்வநாயகத்தின் வயல்களை காட்டுமிருகங்கள் இரவு நேரங்களில் நாசப்படுத்தி வந்தது. அதனால் அவன் வயலைச் சுற்றி ஒரு வலையை விரித்து வைத்தான். ஒருநாள் அந்த வலையில் ஒரு நரி சிக்கிக் கொண்டது.

மறுநாள் காலையில் வயலுக்கு வந்த அவன், தினமும் காலையில் நரி முகத்தில் விழிப்பது அதிர்ஷ்டம் என்று எண்ணினான். அதனால் நரியை வீட்டில் வளர்க்க விரும்பி வீட்டுக்கு கொண்டு வந்தான். ஓடிவிடாதபடி கயிற்றால் கட்டிப் போட்டான்.

காட்டில் தன் இஷ்டப்போல் சுற்றித்திரிந்த நரிக்கு வீட்டில் அடைபட்டுக் கிடப்பது பிடிக்கவில்லை. அதனால் ஒரு தந்திரம் செய்தது. நள்ளிரவில் கிளி, கோழி, பூனை, நாய், ஆடு அனைத்தையும் அழைத்தது. "இந்தக் குடியானவன் நன்றி இல்லாதவன். உங்களை ஏமாற்றுகிறான் (நாய்) வீட்டையும், "தோட்டத்தையும் காவல் காக்கிறீர், கோழி அவன் அதிகாலையில் விழித்தெழ உதவுகிறது, பூனையார், வீட்டில் எலித் தொல்லை இல்லாமல் பார்த்துக் கொள்கிறது. கிளியோ அவனது குழந்தைகளிடம் அன்பாக பழகுகிறது. நீங்கள் எல்லோரும் அவனுக்கு நல்லவிதமாக பயன்பட்டாலும் அவன் மாட்டுக்கு மட்டும் பொங்கல் விழா நடத்தி கொண்டாடுகிறான். உங்களை ஓரவஞ்சனையாக நடத்துகிறான். இது உங்களுக்கெல்லாம் அவமானம் அல்லவா?" என்று கேட்டது.

நரி இப்படிக் கூறியதைக் கேட்ட மற்ற பிராணிகள் திகைத்தன. பதில் சொல்ல முடியாமல் நின்றன. சிறிது யோசனைக்குப் பிறகு எல்லா பிராணிகளும் ஒற்றுமையாக பேசின. "நரியாரே, நீர் பிராணி இனம் என்பதால் எங்கள் மீது அக்கறை கொண்டு பேசுகிறீர். நன்றி. நல்லது நீர் இதற்கு ஒரு வழி சொன்னால் அதன்படி நாங்கள் செய்கிறோம்" என்றன. நரி பிராணிகளிடம் தன் யோசனையைச் சொன்னது.

மறுநாள் விடிந்ததும் பிராணிகள் குடியானவனிடம் முறையிட்டன. "நீர் மாடுகளை மட்டும் பண்டிகை கொண்டாடி கவனிக்கிறீர். இனிமேல் நாங்கள் வேண்டுமானால் மாடுகள் போல வண்டி இழுக்கிறோம். எங்களுக்கும் நல்லவிதமாக பண்டிகை கொண்டாடி பராமரிக்க வேண்டும்" என்றன ஆடுகள்.

"நான் வேண்டுமானால் வயலில் உழுகிறேன்" என்றது நாய்.

"நாய்க்குப் பதிலாக நான் காவல் செய்கிறேன்" என்றது பூனை.

"பூனைக்குப் பதில் நான் எலி பிடிக்கிறேன்" என்றது கோழி.

"கோழிக்குப் பதிலாக கூவி எழுப்புகிறேன்" என்றது கிளி.

பிராணிகளுக்கு என்ன ஆயிற்று என்று யோசித்தான் குடியானவன். "ஏதோ தவறு நடக்கிறது. முதலில் அவற்றுக்கு மாட்டின் பெருமையை புரிய வைக்க வேண்டும்" என்று எண்ணியவன், "சரி உங்கள் விருப்பப்படியே பணி செய்யுங்கள். நான் உங்களையும் நன்கு பராமரிக்கிறேன்" என்று சம்மதம் தெரிவித்தான்.


மறுநாள் குடியானவன் ஆடுகளை வண்டியில் பூட்டிக் கொண்டு வயலுக்குச் சென்றான். பாரம் தாங்க இயலாமல் ஆடுகள் திண்டாடின. நாய்களை கலப்பையில் பூட்டி ஏர் உழுதான். நுகத்தடியை சுமக்க இயலாமல் நாய்கள் சுருண்டு படுத்தன.

காவல் பொறுப்பேற்ற பூனை. "மியாவ் மியாவ்" என்று கத்தியது. அன்று இரவு வந்த திருடர்கள் பயப்படவில்லை. குடியானவன் வீட்டில் சில பொருட்களை அள்ளி சென்றனர். எலி வேட்டையாட வந்த கோழி எலிகளை பிடிக்கிறேன் என்று நெல் மூட்டைகளை கொத்திக் கிழிக்க நிறைய நெல்மணிகள் சிந்தின. அவற்றை எலிகள் தின்று தீர்த்தன. குடியானவனை எழுப்பிவிடும் பொறுப்பை ஏற்ற, கிளி பொழுது விடிவது தெரியாமல் தூங்கிவிட்டது.

ஓரிரு நாட்களில் பிராணிகள் எல்லாம், தங்களால் மற்ற பிராணிகள் செய்த வேலையை செய்ய முடியவில்லை என்பதை ஒப்புக் கொண்டன. "மாடுகள் கடினமாக உழைப்பதால் அதற்கு பண்டிகை கொண்டாடுவது சரிதான். நாங்கள் நரியாரின் பேச்சைக் கேட்டுத்தான் இப்படி தவறாக நடந்து கொண்டோம். எங்களை மன்னித்துவிடுங்கள்" என்று குடியானவனிடம் வேண்டின. உடனே குடியானவன் நரியை தண்டாயுதத்தால் விரட்டியடித்தான். நரி நொண்டிக் கொண்டே காட்டுக்குள் ஓடி ஒளிந்தது.

## பாப்பா முரசு

### ரயில் நிலையத்தில் பணிபுரியும் குரங்குகள்



ஜப்பான் நாட்டின் யைாபோகோ நகர ரெயில் நிலையத்தில் 2 குரங்கு குட்டிகள் கௌரவ ஸ்டேஷன் மாஸ்டராக பணிபுரிகின்றன. 7 மாதம் நிரம்பிய நெகிமி, 3 மாதம் ஆன ராகன் என்ற குரங்கு குட்டிகள் தான் இவை. ஸ்டேஷன் மாஸ்டர்கள் அணிவது போல வண்ண சீருடை, சிறிய தொப்பி அணிந்து இவை ரெயில் நிலையத்தை வலம் வருகின்றன. சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் இந்த 2 குரங்கு குட்டிகளும் கௌரவ ஸ்டேஷன் மாஸ்டராக நியமிக்கப்பட்டுள்ளன.

### பல் துலக்கும் நீர் யானை




சீனாவில் உள்ள ஷாங்காய் விலங்கியல் பூங்காவில் உள்ள நீர் யானைகளுக்கு 3 வாரங்களுக்கு ஒரு முறை பல் துலக்கி விடப்படுகிறது.

இந்த மிருகக்காட்சி சாலையில் உள்ள நீர் யானைகளுக்கு உணவாக பழங்கள் மற்றும் காய்கறிகள் கொடுக்கப்படுகிறது. இதனால் அதன் உணவுத் துணுக்குகள் பற்களின் இடையில் சிக்கிக் கொள்கின்றன. இதனால் பற்சிதைவு மற்றும் பல நோய் ஏற்படும் ஆபத்து உள்ளதால் பல் துலக்கப்படுகிறது. காடுகளில் இலை வசிக்கும் போது புற்களை மட்டுமே உணவாக கொள்கின்றன. இதனால் அங்கு பல் துலக்க வேண்டிய அவசியம் இல்லை.

## நம்பினால் நம்புங்கள்



புகழ் பெற்ற ஆங்கில நடிகர் டிக் வான் டைக். சிட்டி சிட்டி பாங் பாங் மற்றும் மேரி பொப்பின்ஸ் போன்ற ஆங்கில படத்தில் நடித்தவர் இவர். ஒரு முறை இவர் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் கடற்கரையில் நீர் சறுக்கு விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவர் மிதவையில் படுத்தபடி கண்ணயர்ந்துவிட்டார். அப்போது அந்தப்பகுதியில் கூர்மையான பற்களைக்கொண்ட சுறா மீன் கூட்டம் வந்தது. ஆனால் அவை நடிகர் டிக்கை ஒன்றும் செய்யவில்லை. மேலும் அவரை நெட்டித்தள்ளி கரைக்கு பத்திரமாக தள்ளிவிட்டது.




## இணையுங்கள்

இவற்றை இணைத்து முழுமைப்படுத்தி அது எந்த விலங்கு என்று கண்டுபிடியுங்கள்

## உங்களுக்கு தெரியுமா?

1936ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஜெஸி ஓவன்ஸ் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றார். கறுப்பர் இனத்தைச் சேர்ந்த அவரை ஹிட்லர் பாராட்ட மறுத்தார். இதனால் ஆத்திரமடைந்த அவர் தனது தங்கப் பதக்கத்தை ஒஹியோ ஆற்றில் வீசி எறிந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருகிறார் பார்வதி

பூ படத்தில் நடித்தவர் பார்வதி மேனன். தற்போது நீண்ட இடைவேளிக்கு பின்பு, மீண்டும் நடிக்க வருகிறார். வந்தேமாதரம் உள்ளிட்ட புகழ்பெற்ற அல்பங்களைப் படமாக்கிய பரத் பாலா இயக்கும் புதிய படமொன்றில் தனுஷ் நாயகனாக நடிக்க, பார்வதி நாயகியாக இணைகிறார்.

இப்படம் குறித்து நாயகன் தனுஷ் படத்தில் தனக்கு யார் நாயகியாக வரவேண்டும் என எந்த விருப்பத்தையும் தெரிவிக்கவில்லை என்று படக்குழுவினர் கூறியுள்ளார்கள். தயாரிப்பாளரின் விருப்பப்படி யாரை வேண்டுமானாலும் நாயகியாக்கட்டும் என்று அமைதி காக்க, பார்வதி வந்திருக்கிறார். இதுகுறித்து நாயகி பார்வதி, தனுஷ் ஜோடியாக நடிப்பதில் மிகுந்த திருப்தி என்றும், இந்த வாய்ப்பு தனக்கு புதிய கதவு களைத் திறக்கும் எனவும் தெரிவித் துள்ளார்.

# பிரிந்த ஜோடி இணைகிறது?

சிம்புவும், நயன்தாராவும் திகதி இருந்தால் ஜோடியாக நடிப்பதில் எந்தவித பிரச்சினையும் இல்லை என்று அறிவித்துள்ளனர். இவர்கள் இருவரும் 'வல்லவன்' படத்தில் ஜோடியாக நடித்த போது காதல் ஏற்பட்டு பின்னர் மோதல் ஏற்பட்டு பிரிந்தனர்.

இதைத் தொடர்ந்து நயன்தாராவுக்கும், பிரபுதேவாவுக்கும் காதல் மலர்ந்து சமீபத்தில் அவர்களும் பிரிந்தனர். இந்நிலையில், சிலம்பரசன் நடிக்கும் வாலு என்ற புதிய படத்தில் நயன்தாராவை கதாநாயகி யாக நடிக்க கேட்டதாகவும், அப்போது நயன்தாரா தனக்கு ரூ.3 கோடி சம்பளம் வேண்டும் என்றும், தன்னிடம் சிலம்பரசன் நெருங்கிப் பழகக்கூடாது, கேரவனுக்குள் வந்து பேசக்கூடாது என்று நிபந்தனைகள் விதித்ததாக வெளியான தகவல் பரபரப்பான செய்தியாகிவிட்டது.

ஆனால் இதனை இருவருமே இப்போது மறுத்துள்ளனர். இதுகுறித்து நயன்தாரா கூறுகையில், வாலு பட இயக்குநர் விஜய் அந்த படத்துக்காக என்னிடம் திகதி கேட்டது உண்மை. ஆனால் நான் இப்போது 3 தெலுங்கு படங்களில் நடிப்பதால் இந்த படத்திற்கும் திகதி கொடுத்தால் குழப்பம் ஏற்படும் என்பதால் என்னால் திகதி கொடுக்க முடியவில்லை.

மேலும் எனக்கு, சிம்புவுடன் எந்த பிரச்சினையும் கிடையாது. அவருடன் நடிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. என்னிடம் திகதி இருந்தால் மட் நடிப்பேன். இல்லையென்றால் நடிக்கமாட்டே தெரிவித்துள்ளார். இதுகுறித்து சிம்பு கூறு பிரச்சினையும் கிடையாது. நயன்தாரா நிப திகதி இருந்தால் நாங்கள் இருவரும் சேர்



# மக்கள் மனங்களில் இடம்

தமிழ் திரையுலகில் ரஜினிகாந்த், சத்யராஜ் போன்றோர் முதலில் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்து மக்களின் மனதில் இடம்பிடித்தனர். பின்னர் மக்களின் ஆதரவுடன் கதாநாயகனாக உயர்ந்தனர். ரகுவரன் வில்லனாக நடித்தாலும், பின்னர் குணச்சித்திர வேடங்களில் வெளுத்து வாங்கினார்.

ரஜினி, சத்யராஜ், ரகுவரனுக்குப் பிறகு, வில்லனாக நடித்தவர்களில் வரவேற்பைப் பெற்றவர் பிரகாஷ்ராஜ். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி என பல மொழிகளில் இந்தியாவின் பல முன்னணி கதாநாயகர்களுடன் போட்டியிட்டு நடிப்பதில் பிரகாஷ்ராஜ்தான் முன்னிலையில் இருப்பார்.

மேலும் நல்ல கதையம்சம் உள்ள படங்களின் மீது ஆர்வம்

கொண்டு தொடங் தான் எ மசாலா பார்த்து இறுதி இயக்கி படத்துக் கமர்ஷி படத்திற் சீக்கிரமே கொலிவு

# சீயானின் புதிய

விஜய் இயக்கத்தில் தெய்வத்திருமகள் படத்திற்குப் பின்பு, சீயான் விக்ரம் 'தாண் படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் அனுஷ்கா இவருக்கு ஜோடியாக நடிக்கிற மற்றொரு ஜோடியாக மதராசபட்டினம் புக எமி ஜாக்ஸனும் நடிக்கிறார்.

தற்போது 'தாண்டவம்' படப்பிடிப்பை அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் எடுக்க இயக்குனர் திட்டமிட்டுள்ளார். இப்படத்தில் நிழல் உலக தாதாக்களைப் பற்றி இயக்குனர் விஜய் கூறுவதாக கொலிவூட்டில் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் தாண்டவம்

# ஐ ஃபோனிலும் புகுந்து விளையாடும் இசையமைப்பா

இரும்பிலே ஓர் இருதயம், என்னமோ ஏதோ, அஸ்கு லஸ்கா, அழைப்பாயா போன்ற வெற்றிப்பாடல்களை கார்க்கி எழுதியுள்ளார். தற்போது ஐ ஃபோன் மற்றும் ஐ பாட் சாதனங்கள் பயன்படுத்துவோர் கார்க்கியின் இப்பாடல்களை தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். இந்த செயலியில் இவரின் பாடல்கள் ஆங்கில ஒலியாக்கம் மற்றும் மொழியாக்கத்துடன் கிடைக்கும். பிரபல மொழிபெயர்ப்பாளர் ரேக்ஸ் மற்றும் நந்தினி கார்க்கி இந்த செயலியில் இடம்பெற்றிருக்கும் பாடலை கவித்துவமாக மொழிபெயர் கார்க்கியின் புகைப்படங்கள் அடங்கிய மின்காட்சியகம் ஒன்றும் ப கலந்தாலோசிக்கும் இணைய அறை ஒன்றும் டுவிட்டர் மூலம் தொடர்பு கொள்ள வசதியும் இந்த செயலியின் மற்ற அம்சங் உள்ள

தாக்ஷா என்ற நிறுவ இம்மாதம் அறிமுக கார்க்கியின் பு இலத்திரனிய இந்த தன அமையும் தாக்ஷா கருதுகி

# ஆடை களைந்த நாயகிகள்!

களவாணி படம் மூலம் தமிழில் நாயகியாக அறி முகமானவர் ஓவியா. கமலுடன் மன்மதன் அம்பு படத்தில் சிறு வேடத்தில் வந்தார். அதன் பின் மெரினா படத்திலும் நடித்தார். அனைத்தும் குடும்பப் பாங்கான கதாபாத்திரங்களுமாக இருந்தன. தற்போது மசாலா கபே, சிலு சிலுனு ஒரு சந்திப்பு, சிவன் ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

இதில் மசாலா கபே படத்தில் ஆடைகளை குறைத்துக் கொண்டு ஆபாசமாக நடித்துள்ளார், இவருக்கு போட்டியாக அஞ்சலியும் நடித்துள்ளார்.

அஞ்சலியும் இதற்கு முன் குடும்பப் பாங்கான வேடத்தில் நடித்து வந்தார். இருவரும் இந்த அளவு நடித்திருப்பது திரையுலகினரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...து?

...டுமே
...கையில்,
... அந்த
...
...நான்
...ளில்
...
...திகதி
...
...ன் எந்த
...வருடன்
...சேபனையும்
...ருந்தால் மட்டுமே அவர் படத்தில்
... நடிக்கமாட்டேன் என்று
... சிம்பு கூறுகையில், நயன்தாராவுடன் நடிப்பதில் எனக்கு எந்த
...யன்தாரா நிபந்தனைகள் விதித்ததாக வதந்தியை பரப்புகிறார்கள்.
...ருவரும் சேர்ந்து நடிப்போம் என்று தெரிவித்துள்ளார்.





# ...இடம்பிடித்த வில்லன்

... கொண்டு, தயாரிப்பு நிறுவனம் ஒன்றைத் தொடங்கினார். தான் நடிப்பது மசாலா படங்கள் தான் என்றாலும், தான் தயாரிக்கும் படங்களில் மசாலாத்தனங்கள் குறைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்வார்.

இறுதியாக தமிழில் 'தோனி' படத்தை இயக்கினார். இப்போது, இயக்குனராக தன் அடுத்த படத்துக்கான வேலைகளில் ஈடுபட்டு வருகிறார். கமர்ஷியல் படங்களின் படப்பிடிப்பிற்கு நடுவே, தன் படத்திற்கான எழுத்துப் பணிகளில் மும்முரமாக இருக்கிறார். சீக்கிரமே அடுத்த படம் குறித்த அறிவிப்பு வரும் என்று கொலிவூட் வட்டாரம் தெரிவித்துள்ளது.

# சல்மானை புரிந்து கொண்டவராம்! கூறுகிறார் அசின்

சல்மான் கான் நகைச்சுவையாக பேசுவதை மற்ற பெண்கள் தவறாக புரிந்து கொள்கின்றனர், நான் மட்டும் தான் சரியாக புரிந்து கொண்டுள்ளேன் என அசின் கூறியுள்ளார்.

சல்மான் - அசின் நெருக்கம் குறித்து பத்திரிகைகள் தொடர்ந்து எழுதி வருகின்றன. சினிமாவைத் தாண்டி இருவருக்குள்ளும் உறவிருப்பதாக மும்பை பத்திரிகைகள் ஆரம்பத்திலிருந்தே செய்தி வெளியிட்டு வருகின்றன. அசினுக்கு வீடு வாங்கிக் கொடுத்தார் சல்மான் என்றுகூட செய்தி உண்டு. ஆனால் அதையெல்லாம் மறுத்து வந்தார் அசின்.

இந்நிலையில் இப்போது தங்கள் ஜோடிப் பொருத்தம் திரையில் கச்சிதமாக வரக் காரணம் என்ன என்பதற்கான விளக்கத்தை அவர் தந்துள்ளார். அதாவது, நிஜத்திலும் புரிதலுடன் கூடிய மனநிலை இருந்தால்தான் திரையில் ஜோடிப் பொருத்தம் சரியாக வரும். எனக்கும் சல்மானுக்கு வெளியிலும் நல்ல உறவு உள்ளது. அதுதான் நட்பு. வேறு எதையும் கற்பனை செய்ய வேண்டாம். சல்மானுக்கு நல்ல நகைச்சுவை உணர்வு உண்டு. அவரது அந்த நகைச்சுவையை சிலர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். நான் அவரை சரியாகப் புரிந்து கொண்டேன்.

நாங்கள் இரண்டு படங்கள் சேர்ந்து செய்தோம். மூன்று ஆண்டுகளுக்கு மேல் எங்களுக்குள் நல்ல புரிதல் உள்ளது. அதுதான் எங்களை நல்ல ஜோடியாக திரையில் காட்ட உதவுகிறது என்றார்.

# ...திய தாண்டவம்

...த்திருமகள்
...க்ரம் 'தாண்டவம்'
...இப்படத்தில்
...க நடிக்கிறார்.
...ட்டினம் புகழ்
...
...டப்பிடிப்பை
...ாடுகளில்
...மிட்டுள்ளார்.
...க
... இயக்குனர்
...க
...் தகவல்
...யுள்ளது.
...லும்
...ண்டவம்


படத்தில் ஜீவாவும் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிப்பதாக தகவல் கசிந்துள்ளது. இஷா ஷெர்வானி, தபு முக்கிய கதாபாத்திரங்களில் வருகின்றனர். இவர்களுடன் நாசர், சரண்யா பொன்வண்ணன் ஆகியோர் நடிக்கின்றனர். இப்படத்திற்கு 'இசை இளவல்' என செல்லமாக அழைக்கப்படும் ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார்.





# ...தந்து ...மப்பாளர்!

...க்கும்.
...ர்க்கி இந்த
...மொழிபெயர்த்துள்ளனர்.
... ஒன்றும் பாடல்கள் பற்றி அனைவரும்
...ட்டர் மூலம் கார்க்கியுடன் நேரடியாக
...ற்ற அம்சங்களாகும். அமெரிக்காவில்
... என்ற நிறுவனம் இந்த செயலியை
...தம் அறிமுகப்படுத்த உள்ளனர்.
...ர்க்கியின் புதுமையான தமிழ் வரிகளை
...இலத்திரனிய பொருட்கள் பயன்படுத்தும்
... இந்த தலைமுறைக்கு விருப்பமானதாக
... அமையும் என்று
...தாக்ஷா
...கருதுகிறது.





# நயனின் இடத்திற்கு குறி வைக்கிறாரா த்ரிஷா?

கடந்த 3 வருடமாக காதலித்து வந்த பிரபுதேவா, நயன்தாரா திடீரென்று பிரிந்துள்ளனர். இந்நிலையில் கடந்த 3ஆம் திகதி பிரபுதேவாவுக்கு பிறந்தநாள். அன்று நெருங்கிய நண்பர்களுக்கு சென்னையில் உள்ள தனது பங்களாவில் விருந்து கொடுத்தார்.

நெருக்கமான நண்பர்கள் மட்டுமே பங்கேற்ற இந்த விருந்தில் நடிகை த்ரிஷாவும் நேரில் வந்து இன்ப அதிர்ச்சி தந்தார். அவ்வரை கைகுலுக்கி வரவேற்றார் பிரபுதேவா. இருவரும் கட்டிப்பிடித்தபடி போட்டோவுக்கு போஸ் கொடுத்தனர்.

இது அங்கிருந்தவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பின்னர் அங்கிருந்து விடைபெற்றார் த்ரிஷா. பிரபுதேவாவுடன் நெருக்கமாக எடுத்துக் கொண்ட புகைப்படத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார் த்ரிஷா.

இதுபற்றி அவர் கூறும் போது, தெலுங்கில் எனக்கு பெரிய வரவேற்பை பெற்றுத்தந்த 'நு ஒஸ்தானன்டே நே ஒத்தன்டானா' என்ற படத்தை பிரபுதேவா அளித்தார். அவருக்கு என்றும் நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இடம் கண்ட இடத்தில் மடம் அமைக்கும் பிரபுதேவா, அதேபோன்று திரிஷாவினதும் குணாம்சங்களை அறிந்தவர்கள் கற்பனை குதிரைகளில் பயணிக்க ஆரம்பித்துள்ளனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேன் கிண்ணம்



## நம்பிக்கை வளர நீ வருக..!

சித்திரைத் தாயே!
இத் தரை மாந்தர்
மனத் தரையில் - நம்பிக்கை
விதை முளைக்க...
எம்மைச் சூழ்ந்துள்ள
மாய இருள் விலக!!
இன் முகத்துடன்
இனிதே நீ வருக!!
இன்பங்கள் பல தருக..!!
இன ஒற்றுமை வளர...!

து.திலக்,
யாழ்ப்பாணம்.

# சித்திரையின் சிறப்புகள்!

சித்திரையில் வரும் மேட ராசி தொடங்கி கால புருஷன் இயங்குகிறான். மக்கள் வாழ்க்கை, பிறப்பு, இறப்பு என எல்லாவற்றையும் இயக்குகிறவன் இந்தக் கால புருஷன் ஆவான். மக்களை ஆள்வதால் வருடத்துக்கு ஆண்டு என்று பெயர். 12 மாதங்களும் அந்த கால புருஷனின் உடல் உறுப்புகளாகச் சித்தரிக்கப்படுகின்றன. மனிதனைப் பீடிக்கும் நோய் நொடி போன்றவை எல்லாம் அந்தந்த மாதத்தில் அந்தந்த உறுப்புகளில் ஏற்படுகிறது. வெயில் அதிகமான சித்திரையில் அவனது தலை இருக்கிறது. வெயில் காரணமாக வரும் தலை வலி, மயக்கம் போன்றவை பீடிக்கும் மாதம் அது. தை மாதம் என்பது கால புருஷனது கால் முட்டியாகும். தை மாதக் குளிரில் மூட்டு நோய், மூட்டு வலி போன்றவை அதிகரிக்கும். மேலும், தலையிலிருந்துதான் வருடம் ஆரம்பிக்க வேண்டும். தை மாதத்தில் வருடப் பிறப்பென்றால், முட்டியிலிருந்து ஆரம்பிக்கும். அது சரியல்ல.

கிரக அவஸ்தைகள் என்று ஜோதிடத்தில் உண்டு. ஒரு ராசியில் இருக்கும் 30 பாகைகளை 5 பாகங்களாகப் பகுப்பார்கள். ஒரு ராசியின் 0 பாகம் ஆரம்பித்து பாலன், குமாரன், இளைஞன், முதியவன், மரணம் என்று ராசியைச் சமமாகப் பகுப்பார்கள். ஒரு கிரகம் அவற்றுள் எங்கு இருக்கிறதோ அதைப் பொறுத்து அந்தக் கிரகம் பலனைக் கொடுக்கும். முதியவன், மரணம் போன்ற பாகைகளில் அது நல்ல பலனைக் கொடுக்காது. இந்த முறை ஆண் ராசிகளான மேடம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் முதலிய ராசிகளுக்குப் பொருந்தும். மீதி ராசிகளான பெண் ராசிகளில் தலைகீழாகப் பலன்கள் தரும். அதாவது மரணம் தொடங்கி, பாலன் வரை பலன்கள் தரும். சித்திரை மாதம் ஆண் ராசியில் வருகிறது. அதன் 0 பாகையில் சூரியன் நுழையும்போது பாலன் என்றாகி மேலும் மேலும் வளர்ச்சியைக் கொடுக்கும். ஆனால் தை மாதம் பெண் ராசியான மகர ராசியாகும். அங்கு சூரியன் நுழையும் போது மரணகண்டத்தில் ஆரம்பிக்கும். மேலும் தையின் முதல் மூன்று நாட்கள் 'கரி நாட்கள்' இருப்பதாலும், தையில் வருடப் பிறப்பு ஆரம்பிப்பது உசிதமல்ல.

தை மாதம் துவங்கும் மகர ராசியில், சூரியன் நுழையும்போது இருக்கும் கரணம், ஜோதிடத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. 'கரணாத் காரிய சித்தி' என்பார்கள். அப்பொழுது இருக்கும் கரணத்தின் அடிப்படையில், எடுத்த காரியம் நடக்குமா என்று மட்டுமே கணிக்க முடியும். ஆனால் சித்திரை மாதம் மேட ராசியில் சூரியன் நுழையும் நேரம் 'ஜக லக்னம்' எனப்படுகிறது. உலகத்தின் லக்னம் என்பது பொருள். உலக நடப்புகளை அதைக் கொண்டுதான் சொல்ல முடியும். சாதாரண மக்களுக்குப் பிறந்த லக்னமும், சந்திர லக்னமும் முக்கியம். அது போல உலகத்துக்குச் சூரிய லக்னம் முக்கியம். அதைக் கொண்டு ஒரு நாட்டுக்குப் பலன் சொல்ல முடியும்.

நவ நாயகர்கள் என்று ஒரு மந்திரி சபையே சித்திரை வருடப் பிறப்பின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது. அதனால் பஞ்சாங்கம் படிப்பது வருடப்பிறப்பின் முக்கிய அம்சமாகும். சித்திரை வருடப் பிறப்பில் பஞ்சாங்கம் படிக்காமல், தை மாதப் பிறப்பின் போது எப்படிப் பஞ்சாங்கம் படிக்க முடியும்?

சித்திரை வருடப் பிறப்பைப் பொறுத்தே நாடு, மக்கள், பிற உயிரினங்கள், விலைவாசி, விவசாயம், செல்வப்பெருக்கு என்று எல்லாவற்றையும் கணிக்க முடியும். முற்காலத்தில் ராஜாக்கள் சித்திரை வருடப் பிறப்பின் போது பயபக்தியுடன் கடவுளை வழிபட்டு, பஞ்சாங்கப் பலனைக் கேட்டார்கள். அந்தப் பலன்களின் அடிப்படையில், நாடு நலம் பெற என்ன முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும் என்று முடிவெடுப்பார்கள்.

## வருக வருக புது வருடம்



புதுப் பொலிவுடன்
புதுமைகள் பல படைத்து
புண்பட்ட மக்களை
புவியில் சந்தோசமாக வாழ
புன்னகையுடன்
வருக வருக புத்தாண்டே.

சுனாமியால் அழிவு
போரினால் அழிவு
மழையினால் அழிவு என்று
அழிவுகளைச் சுமந்த
எம் போன்ற மக்களுக்கு
சந்தோசப் பூமழை தூவி
வருக வருக புத்தாண்டே.

முட்கம்பி வேலிக்குள்ளும்
நான்கு பக்க உயர்
சிவருக்குள்ளும்
சிறையுண்டு வாடும்
எம் உறவுகளுக்கு
நல்லெதிர் காலத்தைக் கொடுத்து
அவர்களையும் எம்முடன்
உறவாட வழி செய்தாய்.

அனைவரையும்
சந்தோஷத்தில் மூழ்க வைக்க
வருக வருக புத்தாண்டே.

மடிந்தவர்கள்
மடிந்தவர்கள்தான்
இருந்தும் அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
வேண்டி பிரார்த்தித்து
வருக வருக புத்தாண்டே.

ராணிபுத்தன் ரெசிந்தா,
சங்கத்தார் வயல்.

## புனைவர்த்தை பலகொண்டு போற்றுவோம்!

வாதிக்கும் துயரனைத்தும் வலிமையாய் சாய்த்தழித்து; புது
வழியொன்று பிறக்கட்டுமென்னவள்; ஈன்றும்
ஆதிக்க வெறியகன்று அயலவனின் பகை வெறுத்து ; தன்
அன்புறவு தழைக்கட்டும் மீதுதய ; நீதி
சோதிக்கும் திளைமாறி சோதகங்கள் பஞ்சாகி ; வாழ்வு
சோதி வழுவாக வேண்டு யித்திலறவள் ; நடு
நீதிக்குத் தலை சாய்த்து நேர் வழியில் பயணித்து ; நாளை
திமிர்த்து திற்போல் புத்தாண்டே வருக!

வேற்றுமைகள் களைத்திடவே விரைவாக வந்துவிடு ; மன
வேதனைகள் போக்கிடவே துணை அரணாக எழுந்து நின்று ; வீசும்
காற்றனைவரும் தென்றலாகி கலகலமையை இறக்கிவிடு ; மன
கஷ்டமெலாம் தீர்த்திடவே கருணையையும் பயக்கவிடு ; இனி
ஊற்றாகி உயிரெல்லாம் உடுகுவி தனைத்துவிடு ; உடல்
உடைமைகள் ஆனோரை உள்ளன்பாய் ஏற்றுவிடு ; உலகை
போற்றாத தலைவர்களும் புகழட்டும் இத்தாரோடு ; புது
புனை வர்த்தை மேற்கொண்டு போற்றுவோம் பல தாளே!

புன்னகையின் பொருளாக பூமிதனின் விரிவாக ; மனதில்
பெருந்திடமே புதுமைகளாய் வருக ; பழைய
தொன்மையதின் திகழ்வாக துயர் தீக்கும் மகிழ்வாக ; எதையும்
தொட்டணைக்க எழுந்தே நீ வருக ; நல்
எண்ணங்கள் பலவாக வாழ்வு ஏற்றமுடன் சீர்கொள்ள ; இன்று
எழுத்தருள்வாய் 'நந்தன' லே வருக ; கவிகள்
பண்ணிசைத்துப் பலதனையும் பரிவட்டம் பிடிக்கின்றோம் ; இப்
பாரினிலே பரவசமாய் வருக! வருக!

அலெக்ஸ்பரந்தாமன், புதுக்குடியிருப்பு.

## பாவமில்லையா..?

வட்ட நிலவாய் - என்
வாசலிலே வருகிறாய்
வட்ட நடையிலிருந்து - என்
மனதைக் கொள்கிறாய்
பட்டமாகிப் பறக்கிறதே
என் மனது..
ஏனோ..!
பார்த்து இரசிக்கிறாய்
பாவம் என்று
உணராமல்.

பா.பொன்நிலவன்,
மீசாலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவின் டொப் ஸ்பை ஏஜென்சி சி.ஐ.ஏ.யில் பணிபுரியும் முக்கிய அதிகாரிகளே, ஈரான் விஷயத்தில் உளவு அறிக்கை தயாரிக்க நடுங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

முன்பு ஈராக்கில் சதாம் ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கிறார் என்று கொடுக்கப்பட்ட உளவுத் தகவல்கள் பொய்த்துப் போனது போல மீண்டும் ஆகிவிடுமோ என்ற பயம்தான் இதற்கு காரணமாம்.

சதாம் ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கிறாரா என்ற உளவுத் திரட்டலுக்கு இன்சார்ஜாக சி.ஐ.ஏ.யின் முக்கிய அதிகாரி ஒருவர் இருந்தார். அவரது

குறிப்பிட்ட அதிகாரியின் பெயர் வெளியிடப்படவில்லை. ஆனால், அவருடன் ஒன்றாக பணிபுரிந்த மற்றொரு அதிகாரி, "அவர் தனக்கு கொடுக்கப்பட்டுள்ள புதிய அசைன்மெண்ட் குறித்து நடுக்கத்தில் உள்ளார். முன்பு ஈராக் விஷயத்தில் தவறு ஏற்பட்டது போல, இப்போது ஈரான் விஷயத்திலும் தவறு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை தனது நண்பர்களுடன் அவர் பகிர்ந்து கொள்கிறார்" என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

சி.ஐ.ஏ.யின் முன்னாள் உயரதிகாரி கிரெக் தியல்மென், "எனது முன்னாள் சகாவான அந்த அதிகாரி, அமெரிக்காவை ஈராக்குடன் யுத்தத்துக்கு இழுத்துச் சென்றது தாம் கொடுத்த உளவு அறிக்கைதான் என்று இன்னமும் குற்ற

# அறிக்கை தயாரிக்க அஞ்சும் அதிகாரிகள்



தலைமையில் இயங்கிய குழு பதுக்கி வைத்திருக்கிறார் என்பதை அமெரிக்காவுக்கு உறுதிப்படுத்தியது. அதை வைத்தே ஈராக் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது.

ஈராக் தாக்குதல்கள் முடிந்தபோது, குறிப்பிட்ட அந்த அதிகாரி தாம் ஹொட் சீட்டில் இருப்பதை உணர்ந்தார். காரணம், சதாம் பதுக்கி வைத்திருப்பதாக சி.ஐ.ஏ. உளவுத் தகவல் கொடுத்த எந்த ஆயுதமும் கிடைக்கவில்லை.

இப்போது, ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்கிறதா என்ற உளவு அறிக்கை தயாரிக்கும் பணியும், அதே அதிகாரியிடம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

உணர்வுடன் உள்ளார். அவரிடம் மற்றொரு நாடு தொடர்பாக கிட்டத்தட்ட அதே பணியை ஒப்படைத்ததில், மனதளவில் நொருங்கிப் போயுள்ளார்.

மீண்டும் ஒருமுறை தவறு செய்துவிடுவோமோ. மீண்டும் ஒருமுறை அமெரிக்காவை யுத்த முனையை நோக்கி இழுத்துச் சென்றுவிடுவோமோ என்ற கலக்கத்தில் உள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தை கூறியுள்ள கிரெக் தியல்மென், புஷ் ஆட்சிக் காலத்தில், State Department intelligence analyst பதவியை இராஜினாமா செய்தவர். ஈராக் விஷயத்தில் கொடுக்கப்பட்ட உளவுத் தகவல்கள் தவறானவை என்று கூறிய அவர் தனது பதவியைத் துறந்திருந்தார்.

இவர் தனது இராஜினாமா கடிதத்தில், 'நான் எதற்காக எனது பதவியை இராஜினாமா செய்கிறேனோ, அதே காரணத்தை நீங்கள் ஈராக்கில் உணர்ந்து கொள்வீர்கள். அங்கே எப்படித்தான் தலைகீழாக தேடினாலும், சதாம் பதுக்கி வைத்ததாக நீங்கள் நம்பும் ஆயுதங்கள் கிடைக்காது" என்று குறிப்பிட்டிருந்தார்.

அவர் குறிப்பிட்டது போலவே எதுவும் கிடைக்கவில்லை.

இப்போது, ஈரான் அணுகுண்டு தயாரிப்பது தொடர்பாக தயாராகவுள்ள உளவு அறிக்கை பற்றி பேசத் துவங்கியுள்ளார். அன்று உளவு அறிக்கை தயாரித்த அதிகாரி, இம்முறை நடுக்கத்துடன் இன்டெலிஜென்ஸ் ரிப்போர்ட் கொடுக்க உள்ளார் என்றும் கூறுகிறார். இது எங்கே போய் முடியப் போகிறதோ!

# கடல் கொள்ளைக்கு தரையிலும் குறி!

**கடல்** கொள்ளையர்கள் மீது தரையில் தாக்குதல் நடத்தவும் ஐரோப்பிய ஒன்றிய பாதுகாப்பு படைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது, சோமாலிய அரசு.

மேலேயுள்ள கூற்றின் நிஜமான அர்த்தம் உங்களுக்கு புரிகிறதா? புரிந்திருந்தால் அது ஒரு பாரதூரமான விவகாரம் என்று புரிந்திருக்கும். அதை வேறுவிதமாக சொல்வதானால், சோமாலியா நாட்டு எல்லைகளுக்குள் பூரண அனுமதியுடன், ஆயுதங்களுடன் நுழையப் போகின்றன ஐரோப்பியப் படைகள்.

ஐரோப்பியப் படைகளின் போர் விமானங்கள் அல்லது ஹெலிகொப்டர்கள், சோமாலிய எல்லைக்குள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் சொல்லலாம். இதை வெளிநாட்டு இராணுவ ஊடுருவல் என்று சொல்ல முடியாது. காரணம், சோமாலிய அரசின் அனுமதியுடன் இது நடைபெறவுள்ளது.

சோமாலிய கடல் கொள்ளையர்களை கடலில் தாக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கடற்படைகள் தற்போது தமது கப்பல்களை உபயோகிக்கின்றன. கொள்ளையர்களின் படகுகள் கடலில் வந்தால்தான் இவர்களால் தாக்குதல் நடத்த முடியும்.

2008ஆம் ஆண்டில் ஆரம்பித்த இந்தக் கடல் தாக்குதல் நடவடிக்கைகள், ஏராளமான தடவைகள் கடல் கொள்ளையர் படகுகளை தாக்கி விரட்டியடித்துள்ளன. படகுகளை மூழ்கடித்து, கடல்கொள்ளையர்களை கொன்ற சம்பவங்களும் நடந்தன. சோமாலியக் கடலில் மட்டுமின்றி, இந்து சமுத்திர கடல் பகுதிகளிலும் கடல் கொள்ளையர் வேட்டை நடைபெறுகிறது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கப்பல்கள் 5 முதல் 10 வரை எந்த நாளும் ஆபிரிக்கா கடல் பகுதியில் சுற்றிக்கொண்டு இருக்கின்றன. கொள்ளையரை தாக்கும் இந்த ஐரோப்பிய ஒப்பரேஷன், Operation Atalanta என்று அழைக்கப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தை தவிர, நேட்டோ தமது சொந்த தாக்குதல் ஒப்பரேஷனையும் இந்தக் கடல் பகுதியில் நடத்துகிறது. Operation Ocean Shield என்பது அவர்கள் வைத்திருக்கும் பெயர். இப்படியான கடற்படை தாக்குதல்களால், வெளிநாட்டு சரக்குக் கப்பல்களை கடல் கொள்ளையர்கள் தாக்குவது சமீப காலமாக குறைந்து போயுள்ளது. இந்தியக் கடலிலும், செங்கடலிலும் (Red Sea) கடந்த ஆண்டு முதல் 3 மாதங்களில் கடல் கொள்ளையரால் 19 சரக்கு கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால், அதன்பின் வருடம் முழுவதிலுமுள்ள 9 மாதங்களில், 6 சரக்கு கப்பல்கள்தான் கொள்ளையர்களால் கைப்பற்றப் பட்டிருந்தன.

இந்த வருடம் முதல் 3 மாதங்களில் இரண்டே இரண்டு கப்பல்கள்தான் கடல் கொள்ளையரிடம் சிக்கிக் கொண்டன.

என்னதான் கடல் கொள்ளையருக்கு எதிராக ஐரோப்பிய மற்றும் நேட்டோ நாடுகளின் கடற்படை கப்பல்கள் தாக்குதல் நடத்தினாலும், கடல் கொள்ளையரை முழுமையாக அழிக்க முடியவில்லை. அதற்கு காரணம், இவர்களால் கடலில் மட்டுமே தாக்குதல் நடத்த முடியும்.


கடல் கொள்ளையரின் படகுகளை, கடற்படைகளின் ஃபாஸ்ட் அட்டாக் கிராஃப்டுகள் (தாக்குதல் வேகப்படகுகள்) துரத்திச் செல்லும்போது, கொள்ளையரின் படகுகள் சோமாலியக் கரையை அடைந்துவிட்டால், அவர்கள் நாட்டுக்குள் பத்திரமாக தப்பிச் சென்றுவிடுவார்கள். கடற்படை படகுகள் கடலில் நின்றபடி பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

தற்போது ஐரோப்பிய ஒன்றியமும், சோமாலிய அரசும் செய்துள்ள ஒப்பந்தத்தின்படி, கடல் கொள்ளையர் சோமாலியா கரையை அடைந்து, உள்ளே சென்றாலும், தரையில் அவர்களை துரத்திச் சென்று தாக்குதல் நடத்த ஐரோப்பிய ஒன்றியப் படைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியை வைத்து அவர்கள் தமிழ் சினிமாவில் வரும் சேஸிங் காட்சிபோல, படகில் இருந்து துப்பாக்கிகளுடன் குதித்து, கடற்கரையில் துரத்திக் கொண்டு ஓடுவார்கள் என்று அர்த்தம் இல்லை.

இதையெல்லாம் வேறுவிதமாக கையாளுவார்கள்.

எப்படியென்றால், சோமாலியக் கடலில் தரித்து நிற்கும் கடற்படை கப்பலுக்கும், கொள்ளையரை துரத்திச் செல்லும் ஃபாஸ்ட் அட்டாக் கிராஃப்டுகளுக்கும் இடையே ரேடியோ தொடர்பு இருக்கும்.





கொள்ளையர் படகுகள் கரையை நெருங்குகிறது என்றதும், ஃபாஸ்ட் அட்டாக் கிராஃப்டுகளில் இருந்து கப்பலுக்கு தகவல் போய்விடும்.

கப்பலில் இருந்து துப்பாக்கிகளுடன் கூடிய ஹெலிகொப்டர்கள் புறப்பட்டு, கரைப்பகுதியை நோக்கி பறக்க துவங்கும்.

கடல் கொள்ளையர் சோமாலியா கரையில் இருந்து தமது வாகனங்களில் நாட்டுக்குள் உள்ள தமது மறைவிடங்களை நோக்கி ஓடும்போது, ஹெலிகொப்டரில் இருந்து சுலபமாக குறிவைத்து தாக்குவார்கள்.

இது ஒரு வகையான தாக்குதல் என்றால், மற்றொரு வகையான தாக்குதலுக்கும் சாத்தியங்கள் உண்டு.

கொள்ளையரின் மறைவிடங்கள், அவர்கள் ஒன்றுகூடும் வீடுகள் பற்றிய உளவுத் தகவல்களை பெற்று, இரவு நேரங்களில் அந்த இலக்குகளை அழிக்கப் போர் விமானங்கள் அனுப்பி வைக்கப்படலாம். அவை இரவோடு இரவாக வந்து குண்டு வீசிவிட்டு சென்றுவிடும்.

(தொடர்ச்சி 33 ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் உடன்பிறவா சகோதரிகள்

தமிழக முதல்வரும் அவருடைய தோழியுமான சசிகலாவும் மீண்டும் இணைந்திருக்கின்றார்கள். தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு எதிராக செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் சசிகலாவும், அவர் சார்ந்தவர்களும் போயஸ் கார்டனில் இருந்து வெளியேற்றப்பட்ட செய்தி அனைவரும் அறிந்த விடயம்.

தொடர்ந்து நடைபெற்ற கைதுகள் மற்றும் அறிக்கைகள் ஊடகங்களுக்கு பெரும் விருந்தாக அமைந்தது. நீண்ட நாளுக்குப் பின்னர் தமிழக முதல்வரும் அவருடைய தோழியுமான சசிகலாவும் இணைந்திருக்கின்றார்கள். இந்த இணைவுக்கு சசிகலாவின் உருக்கமான அறிக்கை தான் காரணம் என்று கூறப்படுகின்றது. அந்த அறிக்கை ஜெயா டி.வி.யில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. போயஸ் கார்டனில் இருந்து மீடியா சிக்னல் கிடைக்காமல், ஜெயா டி.வி.யில் இப்படி ஒரு அறிக்கை வெளியாக முடியாது. தமக்கிடையே இருந்த எமோஷனலான நீண்ட நாள் உறவு பற்றிக் குறிப்பிடுகிறது சசிகலாவின் அறிக்கை. முதல்வர் ஜெயலலிதாவும் 1984 முதல் 24 ஆண்டுகளாக பழகி வந்துள்ளேன். 88 முதல் போயஸ் தோட்டத்தில் வசித்து வந்தேன். அவரது பணிச்சுமையை குறைக்க விரும்பினேன். அவருக்கு பணியாற்றும் நோக்கம் தவிர உள்நோக்கம் எதுவும் இல்லை. அவரும் என்னை தங்கையாக ஏற்றுக்கொண்டார்.



அ.தி.மு.க. ஆட்சியில் சசிகலா சிண்டிகேட் உறுப்பினர்களின் தலையீடுகள், மறைக்க முடியாத அளவுக்கு வெளிப்படையாக நடந்தவை. சசிகலாவின் இன்றைய அறிக்கையும், அப்படி எதுவும் நடக்கவில்லையே என்று மறைக்க முடியவில்லை.

அவரது அறிக்கையில், போயஸ் தோட்டத்தில் இருக்கும் போது எனது உறவினர்களும், நண்பர்களும் தங்களின் பெயரை தவறாக பயன்படுத்தியுள்ளனர் என்பது ஜெயலலிதா (கடந்த டிசம்பர் மாதம்) நடவடிக்கை எடுத்த பின்னரே தெரிய வந்தது. உறவினர்கள் பல குழப்பங்களை உருவாக்கினர். ஜெயலலிதாவுக்கு எதிராக சதி செய்தார்கள் என்ற செய்தி எனக்கு அதிர்ச்சியும், வேதனையும் அளித்தது என்ற பார்ட், நடந்ததை ஒப்புக்கொள்ளல். "ஜெயலலிதாவுக்கு துரோகம் செய்தவர்கள் எனக்கு வேண்டாதவர்கள் ஆவர். துரோகம் இழைத்தவர்களை மன்னிக்க முடியாது. இவர்கள் உறவை துண்டித்து விட்டேன். எனக்கும் அவர்களுக்கும் ஒட்டுமில்லை, உறவுமில்லை. ஏற்கனவே அவருக்கு (ஜெயலலிதாவுக்கு) எனது வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்டேன். இனியும் எனக்கென வாழாமல், முதல்வருக்கு உதவியாகவே இருக்க விரும்புகிறேன்

கணவர் உட்பட, உறவினர்களில் சிலர் கைதாகி சிறையில் இருக்கும் நேரத்தில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுடன் தொடர்புடைய விவகாரங்கள் பற்றி வாக்குமூலம் கொடுக்கத் துவங்கியுள்ள நேரத்தில் வெளியான அறிக்கை இது.

நிஜமான காரணம், மேலே குறிப்பிட்டபடி, இரு எக்ஸ்ட்ரீம் சாத்தியங்களுக்கும் இடையே, எங்கோ இருக்கும். திடீரென சசிகலாவின் அறிக்கை வெளியாக வேண்டிய அவசியம் என்ன? அது ஜெயா டி.வி.யில் எப்படி வெளியானது? சசிகலா சொல்லியிருப்பது போல, தனது ஆட்களை வெட்டி விட்டு ஜெயலலிதாவுடன் இணையப் போகிறாரா? முழுமையான விபரங்கள் உடனடியாக கைவசம் இல்லை. கைவசம் இருப்பவை, சில தகவல்கள், சில சந்தேகங்கள், சில ஊகங்கள் கிளீன் ஸ்லேட்! எமது உடனடி ஊகம், மிடாஸ் மோகன் கைதுதான் திருப்புமுனை என்பதே! எமக்கு கிடைக்கத் துவங்கியுள்ள தகவல்களும், அந்த ரூட்டிலேயே எம்மை இழுத்துச் செல்கின்றன.

சசிகலாவின் அறிக்கையில் உள்ள வாக்கியங்களை கவனியுங்கள். அவற்றில் நிச்சயம், ஜெயலலிதாவின் டச் இருக்கிறது. இந்த எழுத்து நடை, பரிச்சயமான ஒருவரின் (ஜெயலலிதா அல்ல) எழுத்து நடை. அறிக்கையில் உள்ள ஒரு வாக்கியத்தை கவனியுங்கள். போயஸ் தோட்டத்தில் இருக்கும் போது எனது உறவினர்களும், நண்பர்களும் தங்களின் பெயரை தவறாக பயன்படுத்தியுள்ளனர். இந்த வாக்கியத்தில் நண்பர்களும் என்ற சொல் கொஞ்சம் ஓவராக உள்ளது. தற்போது கைது செய்யப்படுள்ளவர்கள் யார் என்று பாருங்கள். நடராஜன், ராவணன், திவாகரன், மிடாஸ் மோகன் இந்த லிஸ்டில், முதல் மூவரும் உறவினர்கள் என்ற பிரிவுக்குள் வருகிறார்கள். உறவு முறைக்குள் வராத ஒரே நபர், மோகன். அறிக்கையில் கூறப்பட்ட நண்பர் அவர்தான்!

மிடாஸ் மோகன் கைது தொடர்பாக அன்று காலை வெளியான நியூஸ் ஸ்டோரியின் முடிவில், மிடாஸ் விவகாரம் மேலிடம்வரை போய் விட்டது என்பது சசி சிண்டிகேட்டுக்கு புரிந்து விட்டால், பலருக்கு கிடுகிடுக்கும். சம்பிரமைகள், ஒப்புதல் வாக்குமூலங்கள், அறிக்கைகள், எல்லாம் அடுத்த சில தினங்களில பாய்ந்து வரத்துவங்கும்! என்று முடித்திருந்தது ஊடகங்கள்.

அறிக்கை இன்றே வந்துவிட்டது. கொஞ்சம் பொறுங்கள், முழுமையான காரணங்களை ஓரிரு நாட்களுக்குள் தெளிவாக தருகிறோம். சசிகலா தனது அறிக்கையில், முதல்வர் ஜெயலலிதாவும் 1984 முதல் 24 ஆண்டுகளாக பழகி வந்துள்ளேன்.

88 முதல் போயஸ் தோட்டத்தில் வசித்து வந்தேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், இவர்கள் இருவரும் ஒட்டுமில்லை, உறவுமில்லை என்று கடந்த 1996 இல் பிரிந்திருந்தனர். பிரிந்த திகதியில் இருந்து. 100 ஆவது நாள் இருவரும் சேர்ந்து கொண்டனர்.

**இந்திய அரசியல்**

---

# தென்சீனக் கடல் எண்ணெய் வளம் யாருக்கு சொந்தம்?

"தென் சீன கடல் பகுதியில் எண்ணெய் எடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இந்தியா, உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும்" என்ற சீனாவின் எச்சரிக்கைக்கு கடந்த (வெள்ளிக் கிழமை) பதில் கொடுத்திருக்கிறார் வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா.

"குறிப்பிட்ட கடல் பகுதி யாருக்கும் சொந்தமானதல்ல. அங்கு எண்ணெய் எடுக்க முயற்சிப்பதில் இந்தியாவுக்கு எந்தத் தடையும் கிடையாது" என்பது அவரது கூற்று.

பெங்களூரில் செய்தியாளர்களுடன் பேசிய அமைச்சர் கிருஷ்ணா. இந்த கடல் பகுதியில் நடைபெறும் வர்த்தக நடவடிக்கைகளில் எந்த நாடும் தலையிட முடியாது என்பது ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம்.

ஏசியன் (ASEAN – Association of Southeast Asian Nations) நாடுகளின் டயலொக்கில் இது பற்றிய முடிவு எடுக்கப்பட்டது. சீனாவும் அதை ஏற்றுக் கொண்டது. இப்போது திடீரென அந்தப் பகுதியில் சீனா உரிமை கொண்டாடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை சீனா, "இந்தியா தென் சீன கடல் பகுதியில் எண்ணெய் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு, தேவையற்ற சிக்கல்களை விலகியிருந்து தவிர்த்துக்கொள்ள வேண்டும்" என்று எச்சரித்திருந்தது. இந்த விவகாரம் புரிய வேண்டுமானால், முதலில் ஒரு விஷயத்தை தெரிந்து கொள்ளுங்கள். இவர்கள் குறிப்பிடும் கடல் பகுதியில் சில தீவுகள் உள்ளன. அந்த தீவுகள் எந்த நாட்டுக்கும் சொந்தமானவை அல்ல. குறிப்பிட்ட தீவுகள் தமக்கே சொந்தமானவை என்று சீனா வாதிடுகிறது. அந்த விவகாரத்தில் எதுவித முடிவும் எட்டப்படவில்லை.

சீனா அந்த தீவுகளை தமக்கு சொந்தமாக்கிக் கொண்டால், அதைச் சூழவுள்ள கடல் பகுதியும் அவர்களது கடல் எல்லைப்பாக மாறிவிடும். தென்சீனக் கடலின் ஊடாக நடைபெறும் கப்பல் வர்த்தகத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிடும் இதனால், அந்த தீவுகள் சீனாவின் கைகளில் கிடைக்கக்கூடாது என்று பல நாடுகளும் முயற்சி செய்கின்றன. முயற்சி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. தீவுகள் யாருக்கு சொந்தம் என்று முடிவாகாத நிலையில்தான் இந்தியா அங்கு எண்ணெய் ஆய்வு பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த கடல் பகுதியில் இந்தியாவை தவிர வேறு சில நாடுகளும் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. அந்த நாடுகள் அங்கு இயங்குவதையும் சீனா எதிர்த்து வருகின்றது. இந்த விவகாரத்தில் சீனா, இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. சீன ஜனாதிபதி கடந்த மாதம் புதுடில்லிக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அவரது வருகைக்கு சற்று முன்னரே சீன வெளியுறவு அமைச்சு அதிகாரிகள், தென்சீனக் கடல் பகுதியில் இந்தியாவின் நடவடிக்கைகள் தொடர்பாக கடுமையான கருத்துக்களை தெரிவித்ததாக கூறப்பட்டது. ஆனால், அப்போது இரு தரப்பும் வெளிப்படையாக அதைப் பற்றிக் கருத்து எதையும் தெரிவித்திருக்கவில்லை.



சமீபத்தில் வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுடன் முரண்பட்டிருந்தது இப்போது...

இந்தியா கடந்த ஆண்டு ஒக்டோபரில் தென்சீனக் கடல் பகுதியில் எண்ணெய் ஆய்வு செய்வது தொடர்பாக வியட்நாமுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தம், குறிப்பிட்ட கடல் பகுதியில் எண்ணெய் கிடைத்தால் அதை இரு நாடுகளும் தமக்கிடையே பகிர்ந்து சப்ளை செய்வது தொடர்பானது. இப்போது சீனா, "யாருடைய கடலில், யார் எண்ணெய் எடுத்து, யாருடன் பகிர்ந்து கொள்வது?" என்று கோபமாக கேட்டிருக்கிறது. அதுதான் விவகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுத்திறன்

## ஓர் அறிவியல் பார்வை!



**ஞாபகம்** சில பல நாட்களுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்வையோ அல்லது செய்த செயலையோ சரியாக நினைவில் வைத்திருந்து சொல்வது மிகவும் கடினமான ஒன்று. இது வயதானவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

ஆனால், ஒரு சிலர் இருக்கிறார்கள், முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பு நடந்த விஷயங்களை இப்போது கேட்டாலும் மிகத் துல்லியமாக நினைவு கூர்ந்து இம்மி பிசகாமல் அப்படியே விவரிப்பார்கள். இது நமக்கு பிரமிப்பாக இருக்கும். "உண்மையில் எவ்வளவு விஷயங்களை நம்மால் நினைவில் வைத்துக் கொள்ள முடிகிறது என்பதில் பெரிய விசேஷம் ஒன்றுமில்லை. ஆனால், குறிப்பிட்ட ஒரு விஷயத்தை சரியாக நினைவு கூர்ந்து எப்படி சொல்ல முடிகிறது என்பதுதான் எனக்கு மிகவும் பிரமிப்பாக இருக்கிறது" என்கிறார் அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக ஆய்வாளர் பிரையன் குல்.

பழைய நினைவுகளுக்கும் புதிய நினைவுகளுக்கும் இடையில் நடக்கும் போட்டி தான் நினைவுத்திறன் என்கிறது அறிவியல். நினைவுத் திறன் குறித்த முழு புரிதல் மற்றும் நினைவுத்திறன் குறைபாட்டினால் ஏற்படும் மூளைக் கோளாறுகள் குறித்து ஆய்வுகள் செய்யும் குல், புதிய நினைவுகளுக்கும் பழைய நினைவுகளுக்கும் இடையிலான போட்டியை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்காக, குல் மற்றும் அவருடைய ஆய்வுக் குழுவினர் 24 இளங்கலை மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களிடம் ஒரு புகைப்படம் மற்றும் ஒரு வார்த்தை சேர்ந்த பல இணைகளை கொடுத்து அவற்றை வரிசையாக நினைவில் வைத்துக்கொள்ளச் சொன்னார்கள். அதன் பிறகு, கடைசியாக கொடுக்கப்பட்ட புகைப்படம், வார்த்தை இணை குறித்து விவரிக்கச் சொன்னார்கள். மாணவர்களுக்கு ஒரு நினைவை உருவாக்க, ஒரு முகம் அல்லது ஒரு பொருள் அல்லது ஒரு காட்சி, இவற்றுக்கு மேலே ஒரு சம்பந்தமில்லாத வார்த்தையை காண்பித்து நினைவில் வைத்துக்கொள்ளச் சொன்னார்கள். உதாரணமாக, அமெரிக்க அரசியல்வாதி 'அல் கோரே'வின் புகைப்படத்துக்கு மேலே 'நீச்சல்' எனும் ஒரு வார்த்தை காண்பிக்கப்பட்டது (இது பழைய நினைவு). அதன்பிறகு, 'நீச்சல்' எனும் வார்த்தைக்கு கீழே உள்ள அல் கோரே'வின் புகைப்படத்தை நீக்கிவிட்டு அந்த 'கிராண்ட் கேன்யான்' எனும் பிரபல இடத்தின் புகைப்படம் அல்லது காட்சியை வைத்து நினைவு வைத்துக் கொள்ளச் சொன்னார்கள் (இது புதிய நினைவு).

அதன் பிறகு, மூளையை ஸ்கேன் செய்யும் ஒரு ஸ்கேனர் மூலம் மாணவர்களை இணைத்துவிட்டு, நீச்சல் எனும் வார்த்தையை அவர்களுக்குக் காண்பித்து அந்த வார்த்தை புதிய நினைவில் என்ன புகைப்படம் இருந்தது என்று கேட்டார்கள். மூளையின் குறிப்பிட்ட பாகங்கள் வெவ்வேறு வகையான புகைப்படங்களுக்கு, முகம் அல்லது காட்சி, பொருள் ஏற்றவாறு எதிர்வினை செய்யக் கூடியவை. மூளைக்கான தகவல்களை அடிப்படையாக வைத்து, ஒருவர் ஒரு முகத்தை அல்லது ஒரு காட்சியை அல்லது ஒரு பொருளை பார்க்கிறாரா என்பதை அறிய முடியும். மேலும் இதை விளைவிலிருந்து ஒருவருடைய புதிய மற்றும் பழைய நினைவுகளின் உறுதியை வரையறுத்துச் சொல்ல முடியும் என்கிறார் குல்.

இந்தப் பரிசோதனையில், ஒருவருடைய பழைய நினைவு தொடர்பான மூளைச் செயல்பாடு அதிகரித்தபோது அவரால் புதிய நினைவை சரியாக நினைவில் வைத்துக் கொள்ள இயலவில்லை என்பது தெரியவந்தது.

மேலும், ஒருவர் புதிய நினைவை சரியாக ஞாபகம் வைத்துச் சொன்ன போதும் அவருடைய பழைய நினைவு இடையில் வந்து குறுக்கிட்டது கண்டறியப்பட்டது. ஒருவருடைய பழைய மற்றும் புதிய நினைவு ஆகிய இரண்டின் உறுதியும் சமமாக இருந்தபோது, அவர்கள் ஞாபகம் குறித்த கேள்விக்கான பதிலைச் சொல்ல நிறைய நேரம் எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் ஒருவர் தேவையில்லாத ஒரு விஷயத்தை மறக்க முயற்சி செய்கிறார்கள்.

புதிய நினைவுகளை ஞாபகம் வைத்துக்கொள்ள முயற்சிக்கும்போது, தேவையில்லாத பழைய நினைவுகள் குறுக்கீடு செய்து நினைவுத்திறன் குறைபாடுகளை உருவாக்குகின்றனவா என்கிற சந்தேகம் விஞ்ஞானிகளுக்கு நீண்டகாலமாக இருந்து வருகிறது என்கிறார் பிரவுன் பல்கலைக்கழகத்தின் நரம்பியல் ஆய்வாளர் டேவிட் பாத்ரே.

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

### கடல் கொள்ளைக்கு

மொத்தமும் சோமாலிய அரசின் அனுமதியுடன் நடப்பதால், யாரும் எதிர்த்து குரல் கொடுக்க மாட்டார்கள்.

சோமாலிய அரசுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான இந்த தாக்குதல் ஒப்பந்தம், கடந்த வாரம் பெல்ஜியத்தில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில் வைத்து அறிவிக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் உள்ள வாக்கியங்களை படித்துப் பாருங்கள். அவற்றில், மேலே நாம் குறிப்பிட்டதுபோல "பச்சையாக" தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. "Military attacks to cover Somali "coastal territory and internal waters" என்ற வாக்கியம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கடல் ஒப்பரேஷனின் தளபதி ரியர் அட்மிரல் டங்கன் பொட்ஸிடம், "coastal territory and internal waters" என்பதன் அர்த்தம் என்ன என்று கேட்டபோது அவர், "அது போர்க்கப்பல் ஒப்பிரேஷனாக இருக்கலாம். ஹெலிகொப்டர் தாக்குதலாக இருக்கலாம், சோமாலிய கரையோரப் பகுதிகளை கவர் செய்யும் தாக்குதல்களாக இருக்கலாம், கரையில் இருந்து உள்ளே நகரும் வாகனங்கள் மீதான தாக்குதல்களாகவும் இருக்கலாம்" என்று நீண்ட 'லாம்' விளக்கம் கொடுத்துள்ளார்.

அவர்கள் நாளைக்கே போர்க்குற்றம் ஏதும் வந்துவிடாமல் இராஜதந்திர வார்த்தைகளில் கூறுகிறார்கள். நாங்கள் நடைமுறை வார்த்தைகளில் அதைத்தான் கூறியிருக்கிறோம். பைலட்ரல் ஒப்பந்தம் உள்ளதால், அந்தத் தாக்குதல்கள் போர்க்குற்றம் அல்லது மனித உரிமை மீறல் என்ற வகைக்குள் வராது.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

### இரு இனம் இரு மொழி)

சூடாமணி விகாரம் போன்று இது பௌத்த - தமிழ், சிங்கள இன உறவுகளின் ஆதாரம் வான் உயர்ந்துள்ளதை ஏற்றுக் கொண்டு இலங்கையர் இனத்தை உருவாக்கப் பாடுபடல் அவசியமாகின்றது என்பது புலம்பெயர் நாட்டிலுள்ள பல முற்போக்கு சக்திகளின் விருப்பமாகவும் தற்போதுள்ளது.


இலங்கை தமிழர்களின் 1958 அனுபவம், 1983 அனுபவம், இந்திய இராணுவ அனுபவம், முள்ளிவாய்க்கால் அனுபவம் போன்றவைகள் இன்று மக்களை புதிதாய் சிந்திக்க வைக்கும். இக்காலங்களில் தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பின் உள்ளார்த்தம் எமக்கு முன்னால் வந்து நிற்கிறது. இது எம்மை மீண்டும் 2000 வருடங்களுக்கு முன் நாம் யார் என்ற அடிப்படைக் கேள்வியை ஆராய கட்டாயப்படுத்துகிறது. இனவெறியை தூண்டி நாட்டை பிளவுபடுத்தி யாராலும் எதையும் வெல்ல முடியாது என்ற உண்மையை இன்று இந்த புதுவருடப்பிறப்பு உணர்த்தி நிற்கிறது. இனங்களின் ஒற்றுமைக்கான அடிப்படைக் காரணிகளை கண்டறிந்து வரலாற்றில் முன்நோக்கிய பாதையினை வகுக்குமாறு மீண்டும் வரலாறு எமக்கு புதிய பாடத்தினை புகட்டியுள்ளது.

புதுவருடப் பிறப்பு தினக் கொண்டாட்டமானது இலங்கையின் வடக்கு, கிழக்கு, மத்தி, தெற்கு, ஊவா, என்ற பேதவேறுபாடின்றி ஒரு பொதுஇனத்தின் அடையாளமாக இனம் காட்டி நிற்கிறது. சித்திரா வருடம், வைகாசி விசாகம், நவராத்திரி எனவும் சமயங்களின் பொதுவான அடையாளங்களையும் இணைத்து இனங்களின் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தி, தலைவர்களும் முற்போக்குவாதிகளும் மக்களை இலங்கையர் என்ற பொது அடையாளத்துக்குள் நாம் தமிழர்கள் என்ற பொதுவான சிந்தனைப்போக்கை வளர்க்க வேண்டும். இதுவே இலங்கைக்கான நிரந்தர சமாதான வரைவாகும்.


தமிழ், சிங்கள தலைவர்கள் யார் எந்தப்பக்கம் என்ற வேறுபாடற்ற பொது இலங்கைக்கான சிந்தனைப்போக்கை வளர்க்க முன்வர வேண்டும்.


ஸ்ரீ துர்கா ஜெயம்

**கொழும்பிலும் – நுவரெலியாவிலும் அரோகரம், மந்திர மலையாள சக்தி**







கொழும்பிலும் நுவரெலியாவிலும் ஒரு சில வெற்றிகளை வைத்து உங்கள் ரகசியத்தை உண்மையான அக்கொட்டாக தெரிந்து கொள்வதோடு தீய நோய்கள் தீர, கிரக தோஷத்தால் ஏற்படும் தீய பலனுக்கு முறையான தெய்வீக பரிகாரம் செய்து கொள்ள பில்லி சூனியங்களின் கட்டுண்டு தவிப்போரை காப்பாற்ற, எதிரியின் பிடியிலிருந்து தப்பி வாழ, நீண்ட கால திருமண தடை நீங்கி குழந்தை பாக்கியம் கிட்ட, கணவன் மனைவி பிரச்சினைகள் தீர, காதலில் வெற்றி பெற, பிரிந்தவர் ஒன்று சேர, கைவிட்ட காதல் கைகூட, குடி போதையில் இருந்து விடுபட, வெளிநாட்டுப் பிரயாண தடையை நீக்க ஒரு சில வெற்றிகளை கொண்டு வந்தால் அனைத்து விடயங்களுக்கும் நுவரெலியாவிலும் கொழும்பிலும் நிவாரணம் பெற நேரில் வாருங்கள். நீங்கள் ஆச்சரியப்படும்படி உங்கள் ஜாதக கணிப்பையும் எழுதி தருகிறோம். உங்கள் பிரச்சினைகளை ஆராய்ந்த பின்பே அதற்கு உண்டான பரிகாரங்களை பரிபூரண சக்தியால் செய்து வரும் கொழும்பில் அல்லது நுவரெலியாவில் என்னைச் சந்திக்கவும்.

**❀ (நுவரெலியாவில் எனது விரிவான சேவை உண்டு)**

வெளி நாட்டவர்களுக்கென ஸ்ரீ அனுமான் உச்சாடனம், கணவன் மனைவி சேர்க்கை, தாய் தந்தையர் பாசமின்மை, தொழில் சிக்கல், வியாபார விருத்தி, வாகனத் தடை மேலும் அனைத்து குறைகளுக்கும் அந்தந்த தேசங்களுக்கு ஸ்ரீ அனுமான் உச்சாடனம் கண்டறிந்தே பரிகாரம் செய்து அனுப்பப்படுகிறது. வெளிநாட்டவர்களுக்கென விசேடமாக 24 மணித்தியால தொலைபேசி வசதியுண்டு

பேராசிரியர், தேசபந்து

**Prof.P.K.SAMY (I.D.G.A.N.) J.P. ஐயா**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.

NO.23, MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13.

011-2470615, 011-2342463, 011-2342464, FAX.0094-112341831

நுவரெலியா கிளை- இல. 33, Daily Fair Complex 052-2222509




# பாராட்டி வாழ்த்துகிறோம்




நீண்ட காலமாக இருளில் கிடந்த அச்செழு போயிட்டிக் கிராமத்துக்கு மின்சாரத்தினைப் பெற்றுத்தந்தமைக்கும், எமது விநோபாஜி முன்பள்ளிக்கு மலசலகூடம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கிய கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ சில்வேஸ்திரி அலென்ரின் அவர்களையும், யாழ்.மாவட்ட அமைப்பாளர் திரு.க.கமலேந்திரன் அவர்களையும் வலி.கிழக்கு பிரதேச அபிவிருத்தியில் முன்னின்று அயராது உழைக்கும் வலி.கிழக்கு பிரதேச E.P.D.P இணைப்பாளரும், வலி.கிழக்குப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான உயர்திரு இ.ஜங்கரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களின் பணிகள் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அச்செழு போயிட்டி,**

**விநோபாஜி ச.ச. நிலையமும், மக்களும்.**










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org